தென்மொழி

பெரியாரைப் பெற்றிழந்தோம்!
பெற்றி யிழந்தோம்!

கனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி: 11: ஓலை: 4,5. விலை: 75 காசு.

நமக்கு வந்த மடல்கள்.

0: 389: தாங்கள் "ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்" என்பது பற்றி எழுதி வந்ததைப் படிக்கும் போதெல்லாம், இப்படியோர் இனத்தைச் சாடக் கூடாது என்றெண்ணிய துண்டு. இவ்வாறு பலரும் எண்ணியிருக்கலாம்! இதை ஒவ்வொருவரும் பட்டறிவால் உணரும் போதுதான் இதன் மெய்ம்மை புலப்படும். நானும் பட்டுவிட்டேன். பார்ப்பான் கூடவே இருப்பான்; தமிழுக்காக, தமிழ் மொழிக்காகத் தன் இன்னுயிரையும் ஈவதாகத் தம்பட்டம் அடிப்பான்; அற்றம் பார்த்து ஆரிய நஞ்சினைப் பாய்ச்சிடுவான்! பார்ப்பான் நடமாடும் நல்லபாம்பு; தமிழ்க்குமுகாயத்தையும், தமிழையும் அழிக்கும் நஞ்சு; உடனிருந்தே உள்ளதையறிந்து தனக்கிணக்கமான செயலைச் செய்து விடுவான். என்னைபோல் எத்தனைத் தமிழர் ஏமாறியிருப்பர்!

—**புலவர். பூ. அரங்கசாமி,** பச்சளநாயக்கன்பட்டி.

0: 390: ஐயா அவர்கட்கு வணக்கம்!

இக்கால் பல்துறையினரிடத்தும் தனித்தமிழார்வம் ஓங்கி வருவது போன்றே, பொதுவுடைமையரிடத்திலும் அது பெருகி வருவது கண் கூடு. மொழித்தூய்மை ஆர்வலர்களான பொதுவுடைமையர்கள், வழக்கிலுள்ள பிறசொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்கள் இடுகையில், எளியவும் இனியவும் வழக்கிலுள்ளனவு மாகிய சொற்களை ஒதுக்கி அத்தன்மையற்றவையான சொற்களை இடுவது தேவையற்றது. வர்க்கம் (class) என்ற சொல்லுக்கு நேர் தமிழ்ச் சொல் "வகுப்பு" என்பதே. 'வர்க்க' என்ற சொல்லும் 'வகு' என்ற சொல்லடியாகப் பிறந்ததே. குமுகாயத்தை இரண்டாக (ஆளும் வகுப்பு என்றும் ஆளப்படும் வகுப்பு என்றும்) வகைப்படுத்துகிறோம். எனவே "வகுப்பு" என்னும் சொல்லை ஒதுக்கி 'அகவம்' என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டுவதில்லை. இப்படியே எல்லாச் சொற்களுக்கும் உரிய தமிழ்ச் சொற்களை வழக்கிற் கொணரலாம்.

வர்க்கம்–வகுப்பு; முதலாளித்வம்–முதலாளியம்; பூர்சுவா–முதலாளி; ஏகாதிபத்தியம்–முற்றுளுமை (அல்) தனி ஆளுமை) ஆதிக்கம்–மேலீடு; ஏகபோகம்–முற்றுரிமை; நிலப்பிரபுத்வம் (பெரு) நிலக்கிழமை; நிலப்பிரபு–(பெரு) நிலக்கிழார்; ஏகபோக முதலாளித்வம்–முற்றுரிமை முதலாளியம்; சமூக ஏகாதிபத்யம் குமுக முற்றுளுமை; மூலதனம்–முதல் (அல்) முதலீடு. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்–பாட்டாளி வகுப்பு வல்லாட்சி; இப்படியே எல்லாச் சொற்களுக்கும் தூய தமிழ்ச் சொற்களாகப் பயன் படுத்தலாம். மக்கள் மன்றில் நுழைய முற்படுவோர்க்கு மொழித்தூய்மை இன்றியமையாதது. மொழிச்செப்பம் உள்ள இடத்தில் உயிர்ப்பும் கருத்துவலிவும் குடிகொண்டிருக்கும். இதுவரை பொதுமை இயக்கம் இங்கு வலுப்பெறாது இருந்ததற்கான தலையாய கரணியங்களுள், அவர்கள்–பொதுமையர் பயன்படுத்திய உயிர்ப்பற்ற கலவை மொழியும் ஒன்றாம். இங்குக் கூறப்பெற்றவைகளுள் பிழைபாடு உண்டெனில் திருத்தம் தரவேண்டுகிறேன்.

[தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம் பார்க்க]

பெரியாரைப் பெற்றிழந்தோம்! பெற்றி யிழந்தோம்!

பெரும்பணியைச் சுமந்தஉடல்!
பெரும்புகழைச் சுமந்தஉயிர்
'பெரியார்' என்னும்
அரும்பெயரைச் சுமந்தநரை!
அழற்கதிரைச் சுமந்தமதி;
அறியா மைமேல்
இரும்புலக்கை மொத்துதல்போல்
எடுக்காமல் அடித்தஅடி!
எரிபோல் பேச்சு!
பெரும்புதுமை! அடடா, இப்
பெரியாரைத் தமிழ்நாடும்
பெற்ற தம்மா!

மணிச்சுரங்கம் போலவரின்
மதிச்சுரங்கத் தொளிர்ந்தெழுந்த
மழலைக் கொச்சை!
அணிச்சரம்போல் மளமளென
அவிழ்கின்ற பச்சைநடை!
ஆரி யத்தைத்
துணிச்சலுடன் நின்றெதிர்த்துத்
துவைத்தெடுத்த வெங்களிறு!
தோல்வி யில்லாப்
பணிச்செங்கோ! அடடா, இப்
பகுத்தறிவைத் தமிழ்நாடும்
சுமந்த தம்மா!

உரையழகிங் கெவர்க்குவரும்?
உடலழகிங் கெவர்பெற்றார்?
ஒளிர்மு கத்தின்
நரையழகிங் கெவர்க்குண்டு?
நாளெல்லாம் வாழ்க்கையெல்லாம்
நடை நடந்து
இரையுடலை—நோயுடலைச்
சுமந்துபல ஊர்திரிந்து
தொண்டு செய்த
இரைகடலை அடடா, இவ்
வெரியேற்றைத் தமிழ்நாடும்
இழந்த தம்மா!

எப்பொழுதும் எவ்விடத்தும்
எந்நேர மும்தொண்டோ
டிணைந்த பேச்சு!
முப்பொழுதும் நடந்தநடை!
முழுஇரவும் விழித்தவிழி!
முழங்கு கின்ற
அப்பழுக்கி லாதவுரை!
அரிமாவை அடக்குகின்ற
அடங்காச் சீற்றம்!
எப்பொழுது, அட்டா, இவ்
வேந்தனையித் தமிழ்நாடும்
ஏந்தும் அம்மா?

பெற்றிழந்தோம், பெரியாரை!
பெற்றியிழந் தோம்! அவரின்
பெருந்த லைமை
உற்றிழந்தோம்; உணர்விழந்தோம்;
உயிரிழந்தோம்; உருவிழந்தோம்!
உலையாத் துன்பால்
குற்றுயிராய்க் குலையுயிராய்க்
கிடக்கின்ற தமிழினத்தைக்
கொண்டு செல்லும்
நெற்றுமணித் தலைவரினை,
அட்டா, இத் தமிழ்நாடும்
நெகிழ்த்த தம்மா!

பெரியாரைப் பேசுகின்றோம்;
பெரியாரை-வாழ்த்துகின்றோம்
பீடு தாங்கப்
பெரியாரைப் பாடுகின்றோம்;
பெரியார்நூல் கற்கின்றோம்;
பீற்றிக் கொள்வோம்!
உரியாரைப் போற்றுவதின்
அவருரைத்த பலவற்றுள்
ஒன்றை யேனும்
சரியாகக்கடைப் பிடித்தால்
அட்டா, இத் தமிழ்நாடும்
சரியா தம்மா!

தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி: 11. ஓலை: 4,5.

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

சிலை-சுறவம் தி. பி. ௨௦௦௪-ஞ (சன-பிப்-1974)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1 தமிழகம்.

அடிமைத்தமிழரை மீட்க வந்த அருமைத் தலைவர் அறுவர் மறைவு!

கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்குள் தமிழுக்கும், தமிழர்களுக்கும் எற்பட்ட இழப்பு அளவிடற்கரியது. நல்ல காலமோ பொல்லாக் காலமோ, இயற்கையே அப்படிப்பட்ட நிலையை நமக்கு உருவாக்கித் தந்துள்ளது. அவ்விழப்புகளை எவராலும் தடுத்துவிட முடியவில்லை. தமிழ்மொழி நலனிலும், தமிழர்கள் முன்னேற்றத்திலும் மிகுவாக அக்கறை காட்டிய-வாழ்வு முழுவதும் அயராது உழைத்த-ஆறு தலைவர்களை இயற்கை நம்மிடமிருந்து மீட்டுக் கொண்டது. அவர்களுள்

மிகவும் குறிப்பிடத்தக்கவர் அத்தலைவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கிய தந்தை பெரியார் ஈ. வே. இரா. அவர்கள்! பெரியாரின் இழப்பு இந்த இடைக்காலத்திற்கு மட்டுமன்று, இவ்விடையூழிக்கே நேர்ந்த பேரிழப்பாகும். அவர்களின் மறைவால் தமிழர் முன்னேற்றத்தில் மேலும் ஓரிரண்டு நூற்றாண்டுப் பின்தள்ளிப் போனது என்று சொன்னாலும் தவறில்லை. அத்தகைய ஈடுசெய்ய முடியாத 'இனத் தேக்க இழப்பாகும், தந்தை பெரியாரின் இழப்பு!

மற்று, தம் மறைவால் தமிழர் முன்னேற்றத்திற்குப் பேரிழைப்பையும் பெருஞ்சரிவையும் உண்டாக்கிய ஐந்து தலைவர்களும் பண்டாரகர். பேராசிரியர். சி. இலக்குவனார், தமிழ் மறவர். புலவர். வை. பொன்னம்பலனார், அறிவியல் முதுவர். கோ. துரைசாமி தனித்தமிழ்ப் பெரியார். கு. மு. அண்ணல்தங்கோ, இந்தியெதிர்ப்பு மறவர். ஈழத்துச்சிவானந்த அடிகள் என்னும் ஈழத்தடிகள் ஆகியோராவர். இவர்கள் ஐவரும் தன்மானவுணர்வும், சீர்திருத்த மனப்பாங்கும் கொண்ட பகுத்தறிவாளர்கள். தந்தை பெரியார் தலைமையை வரவேற்பவர்கள். இவர்களுள் பேராசிரியர் இலக்குவனாரும், தமிழ் மறவர் வை. பொன்னம்பலனாரும் தமிழையும் தன்மானத்தையும் பரப்புவதற்காகவே தம் வாழ்வின் பெரும் பகுதியைச் செலவிட்டவர்கள். தமிழுக்காகவே துன்பப்பட்டவர்கள். இலக்குவனார் தமிழின் பொருட்டுச் சிறை சென்றார்; பொன்னம்பலனார் தமிழின் பொருட்டுத் தம் பதவியையிழந்தார். இருப்பினும் இறுதிவரை இருவரும் நன்கு பேணப்படாமலேயே வாழ்ந்து இறந்தனர்.

தனித்தமிழ்ப் பெரியார் கு. மு. அண்ணல்தங்கோ அவர்கள் நரை பழுத்த தனித்தமிழாளர். சொல்லாலும் செயலாலும் தமிழ் உலகம் கண்ட பெரியாரவர். பீடும் பெருமையும் மிக்க அவர் தம் போராட்டங்களுக்கு மிக்க விளம்பரமின்மையால், இந்நன்றிகெட்ட தமிழர்களால் அவர் புறக்கணிப்பாகவே வாழ்ந்து மறைந்தார். பெரியார் ஈழத்தடிகளோ தமிழகத்தின் முதல் இந்தியெதிர்ப்பாளர் ஆவார். அவர் நடத்திய இந்திப் போராட்டத்தைத்தான் பெரியாரும் பிறரும் பின்பு தொடர்ந்து நடத்தி வந்தனர். நெடுநாட்களாக நோயுற்று உழன்ற அப்பெருமகனைத் தமிழரும் தமிழக அரசும் பெரிதும் புறக்கணித்துவிடவே, நோய்முற்றித் துன்புற்ற அத்தலைவர் இத் தமிழரை நொந்து கொண்ட உள்ளத்தோடேயே உயிர்துறந்திருக்கின்றார். அவரைப் போன்ற தலைவர்களையும் அறிஞர்களையும் பேணாத குற்றத்திற்காக, இத்தமிழரும் தமிழக அரசும் இன்னும் பற்பல துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாக வேண்டியே இருக்கும்.

அறிவியல் முனைவரான கோ. து. அவர்களோ பிறப்பிலேயே தமிழ் மண்ணில் பிறந்த குற்றத்துக்கு ஆளானவர். இவ்வறியாமையும் அடிமைத்தனமும் நிறைந்த தமிழகத்தில் பிறவாமல், மேலை நாடுகளில் ஏதாவதொன்றில் அவர் பிறந்திருப்பாராளுல், அவர் அறிவும் மக்களுக்குப் பயன்பட்டிருக்கும்; மக்களும் அவரைப் பயன் படுத்திக் கொண்டிருப்பர். இவ்வேதுங்கெட்ட தமிழர்களிடையில் அவர் பிறந்ததனுல் அவர் அறிவுக்கும் வரவேற்பில்லை; அவர்க்கும் பெருமை யில்லை. ஆரியமும் அடிமைத் தமிழும் அவரைப் புறக்கணிக்கவே செய்தன. அறிவியல் துறையிலும் குமுகாயத் துறையிலும் அவர் செய்த-செய்யவிருந்த புதுமைகள் மிகப் பல. மேனுட்டாரும் அவர்தம் பெருமையை உணர்ந்து பாராட்டி வரவேற்புச் செய்துங்கூட, நம் தில்லியரசு அவர் அறிவுக்குத் திரையிட்டு மூடியே மறைத்து வந்தது. அவர் ஒரு வடநாட்டாராகவோ, பார்ப்பனராகவோ இருந்திருப்பா ராளுல் அவர்க்குக் கிடைக்க வேண்டிய அனைத்துப் பெருமைகளுக்கும் மேலாகவே கிடைத்திருக்கும். உலகமும் அவரைக் கண்டு பெருமை யுற்றிருக்கும்; பயனும் பெற்றிருக்கும். ஆனுல் சிறுபான்மை மக்களை அடக்கியாண்டே பழக்கப்பட்ட நேரு அரசும் இந்திரா அரசும் அவர் அறிவுக்குப் பூட்டிட்டே வைத்திருந்தன. தம் காலடியில் விழுந்தவர்களைத் தவிர, வேறு அறிஞர்களை மதிக்காத நம் தலைவர்களும் அவரைத் திரும்பிப் பாராமலேயே இருந்து விட்டனர். இதனுல் தனிப்பட்ட அவருக்கொன்றும் இழப்பில்லை; அவர் குடும்பத்திற்கும் இழப்பில்லை. அறிவுக்கு இழப்பு; மக்களுக்கு இழப்பு; உலகத்திற்கே இழப்பு!

மொத்தத்தில், இத்தலைவர்களால் நேர்ந்த இழப்பினின்றும் துயர மூட்டத்தினின்றும் 'தென்மொழி' தன்னை விடுவித்துக்கொண்டு நடை யிடவே அதற்கு இத்துணை இடைவெளி வேண்டியிருந்தது. மறைந்த அத்தனை அருமைத்தலைவர்களும் தென்மொழிக்கு வெளிப்படை யாகவும் மறைமுகமாகவும் தொடர்புடைய அன்பர்கள்; நண்பர்கள்; புரப்பாளர்கள்; காப்பாளர்கள்; பரப்பாளர்கள்! தந்தை பெரியாரை அவர் மறைவுக்குச் சரியாக ஒருமாதம் முன்புதான் திருச்சியில் கண்டு, அவர் போராட்டத்திற்குத் துணை நிற்பதாக உறுதி கூறினேம். ஆனுல் அதற்குள் தமிழர்களுக்கு விடிவு ஏற்பட்டுவிடக் கூடாது என்னும் இயற்கைக் கொள்கையால் அவர்கள் தம்மையே தம் உயிரியக் கத்தினின்று விடுவித்துக் கொண்டார்கள்; அஃதாவது தாம் மட்டும் விடுதலை பெற்று விட்டார்கள். இக் குருட்டுத் தமிழர்கள் தங்கள் விடுதலையைத் தாங்களே தேடிக் கொள்ளட்டும் என்று விட்டு விட்டார்கள்! இறுதியில் அவருக்கு வெற்றி; அவர் கொள்கைக்குத் தோல்வி!

இவ்வரும்பெரும் தலைவர்களின் ஒட்டுமொத்த இழப்பினால் தமிழர்களும் அவர்களைக் கட்டியாள்கின்ற தமிழக அரசும் அறிய வேண்டுவது ஒன்று:

"அறிஞர்கள் தங்களுக்காக அன்று, மக்களுக்காகவே பிறக்கின்றனர். அவர்களை மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டுவதும், அவர்தம் உண்மை அறிவைப் பெற்று மக்கட்குத் தரவேண்டுவதும், அவ்வுண்மை யறிஞர்களை இனங்கண்டு தெரிந்து, அவர்களுக்குப் பல்லாற்றானும் துணை நின்று, காத்துத் தொடர்ந்து பயன் பெறச் செய்வதும், அம்மக்களுக்காக ஏற்பட்ட அரசியல் ஆளுமையின் கடமையாகும்! இக்கடமைக்கு நன்றியாக அறிஞர்கள் மக்களை அவ்வாளுமைக்குத் துணையாகப் பக்குவப்படுத்துவர்; அதிகாரத்தினாலன்று; அறிவு வேளாண்மையினால்! எனவே, அவர்களைப் புரக்கும் அக்கடமையினின்று அரசோ மக்களோ தவறுகிற பொழுது அவ்வறிஞர்கூட்டம் ஒட்டுமொத்தமாக நாட்டை விட்டு வெளியேறும் என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும். அறிஞர்களைப் பிழைத்த அல்லது பேணாத நாடு பாய்மரம் அற்ற மரக்கலம்போல் பகைப்புயலால் சூழ்வுண்டு மாய்ந்து மறையும் என்பது இயற்கையிட்ட சட்டம். இச்சட்டத்திற்குமேல் அரசியல் சட்டம் ஒன்றும் செயல் படாது: செயல்பட முடியாது என்பதையே கடந்த காலங்கள் நமக்கு மெய்ப்பித்துள்ளன. அரசியல் ஆளுமை நெறி பிறழ்ச்சியுறின் அந்த அரசை வேறு யாராலும் அழிக்க முடியாது; அறமே அழித்து விடும்!"—என்பதே அது!

எனவே ஒட்டு மொத்தமாக தமிழர் நலன்கருதிய தலைவர்கள் அறுவரும் அடுத்தடுத்து மறைந்து போனது நம் அழிவுப் பாதையின் தீக்குறி என்று உய்த்துணர்ந்து கொண்டு, அறிஞர்களைப் பேணுதற்கும் அவர்களால் நாம் உய்வதற்கும் கற்றுக் கொள்ளுவோமாக!

பெருஞ்சித்திரன்.

மிக வருந்துகின்றோம்.

அண்மையில் கோவை அறிவியல் முனைவர், திரு. கோ. துரைசாமி அவர்கள் 4—1—74 அன்றும், இந்தியெதிர்ப்பு மறவர் காஞ்சிபுரம் திரு. ஈழத்தடிகள் 27—1—74 அன்றும் மறைவெய்தினர் என்னும் செய்தி யறிந்து மீளாத் துயரில் ஆழ்ந்தோம். இருவரின் இழப்பும் தமிழர்க்குப் பேரிழப்பாகும். அவர்களின் குடும்பத்தார்க்கும் மற்றோர்க்கும் "தென்மொழி" தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

—அமைச்சர், 'தென்மொழி'

பாவாணர் அறிக்கை!

மதுரைப் பல்கலைக் கழக வரலாற்று மாணவர்க்கு விழிப்புறுத்தம்.

பாண்டிநாட்டுக் கல்லூரி வரலாற்று மாணவர்காள்!

தமிழரின் முன்னோர், வரலாற்றிற் கெட்டாத முதுபழங்காலத்தில், குமரிநாட்டில் தோன்றி முதன்முதல் நாகரிகங் கண்ட உலகப் பழங்குடி மக்கள். அவர்கள் வளர்த்த தாய்மொழியாகிய தமிழ், திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான உலகமுதற்றாய் உயர்தனிச் செம்மொழி. தமிழ இனமும் தமிழும், வலம்புரிச்சங்கும் அதன் முத்தும்போல இணையற்ற தனித்தூய்மையுடையவை. தமிழர் தென்னாட்டுப் பழங்குடிமக்களாதலாலும், பனிமலைவரை பரவியுள்ள திரவிடர் தமிழரின் வழியினராதலாலும், இந்திய வரலாற்றைத் தெற்கினின்று தொடங்க வேண்டுமென்று சென்ற நூற்றாண்டே சுந்தரம் பிள்ளை கூறிய கூற்றை, இந்திய வரலாற்றுத் தந்தையான வின்சென்று சிமிது முற்றும் ஒப்புக்கொண்டார். அதற்கிணங்கியே, பி. தி. சீநிவாசையங்காரும் இராமச்சந்திர தீட்சிதரும் தமிழர் வரலாற்றையும் தென்னிந்திய வரலாற்றையும் தெற்கினின்று தொடங்கி, விரிவாகவும் விளக்கமாகவும் வரைந்துள்ளனர்.

ஆயினும், ஆரியவெறியரும் தமிழ்ப்பகைவருமான நீலகண்ட சாத்திரியார், இந்திய வரலாற்றை வேண்டுமென்றே வடக்கினின்றும் வேதக்காலத்தினின்றும் தொடங்கி, சமற்கிருத இலக்கியத்தையே துணைக்கொண்டு, தமிழர் வெளிநாட்டினின்று வந்தேறிகளென்றும், நீகரோவர் ஆத்திரேலியர் முதலிய ஆறினஞ் சேர்ந்த கலவையினத்தாரென்றும், நண்ணிலக்கடற்கரை நாட்டினின்று வந்த மக்களிடம் தமிழைக் கற்றுக் கொண்டனரென்றும், நாகரிகத்தில் தாழ்ந்தவரென்றும், ஆரியரைப் பின்பற்றியே முருக வணக்கத்தையும் சிவ மதத்தையும் மேற்கொண்டனரென்றும், ஆரிய முனிவராலேயே மண முறையும் மனையறமும் கற்பிக்கப்பட்டனரென்றும், தலைகீழாகவும் தாறுமாறாகவும் தமிழர் வரலாற்றை வரைந்துள்ளார். இதற்குத் துணைநின்றவர் முதல் (ஆதி) வையாபுரி என்பது கவனிக்கத் தக்கது.

மதுரைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவராகப் பர். தெ. பொ. மீ. யால் ஆய்ந்து தேடியமர்த்தப்பட்டவரும், தம்மைப் பேரா. நீலகண்ட சாத்திரியாரின் மாணவரென்று பெருமையாய்ச் சொல்லிக்கொள்பவரும், தமிழ்வெறுப்பிலும் தமிழையுந் தமிழரையும் இழித்தும் பழித்துங் கூறுவதிலும் தமிழ் நாகரிகத்தை மறைப்பதிலும் தம் ஆசிரியரின் உண்மைப் படியெடுப்பாயிருப்பவருமான, பர். என்

சுப்பிரமணியனாரால், கல்லூரி வரலாற்று மாணவர்க்குரிய பாடப் பொத்தகமாக ஆங்கிலத்தில் வரைந்து வெளியிடப்பட்டுள்ள, தமிழ் நாட்டு வரலாறு (History of Tamilnadu), தமிழர் சிறுநீகரவத்தை (Negrito) முதற்கூறாகக் கொண்ட ஒரு கலவையினத்தாரென்றும் (பக். 19), மூலநண்ணிலக் கடற்கரையினக் (Proto-Mediterranean) கூறே விஞ்சியவரென்றும் (பக். 20), கீழை நண்ணிலக் கடற்கரை நாட்டினின்று வந்த ஒரு வகுப்பாரே திரவிடமொழியைத் தென்னாட்டிற் புகுத்தினரென்றும், (பக். 22), ஆகவே கீழை நண்ணிலக் கடற்கரைப் பாங்கரே தமிழரின் பிறந்தகம் என்றும் (பக். 31), சிவமதத்தைத் தமதென்றுகூறத் தமிழர்க்கு என்ன தகுதியுணடென்றும் (பக். 24), தமிழ் வரலாற்றின் தொடக்கக் குறிப்புக்கள் சமற்கிருத இலக்கியத் திலும் பாலி இலக்கியத்திலுமே உண்டென்றும் (பக். 28), இன்னும் பிறவாறும், உண்மையை மறைத்தும் மாற்றியும் மறுத்தும் கூறு கின்றது.

தமிழமாணவர் அனைவரும், சிறப்பாக வரலாற்றுமாணவர், இப் பொத்தகம் பாடப்பொத்தகமாகக் கூடாதென்று பெருங்கிளர்ச்சி செய்தல் வேண்டும். பாடப்பொத்தகமாக வைக்கப்படின், அதைக் கற்பிக்கும் வகுப்பினின்று வெளியேறிவிடல் வேண்டும்.

கன்னடநாட்டில், கன்னட இலக்கியத்தை அமைச்சரொருவர் இழித்துக்கூறினாரென்று, அவர் பதவி நீங்கும்வரை கன்னட மாணவர் அனைவரும் ஒற்றுமையாக வன்கிளர்ச்சி செய்ததை எண்ணிக் காண்க. வையாபுரிகளல்லாத தமிழரும், பி. தி. சீநிவாசையங்காரும் இராமச்சந்திர தீட்சிதரும் போன்ற நடுநிலை வரலாற்றாசிரியரும், எழுதிய வரலாற்று நூல்களையே இனி என்றும் தமிழ்நாட்டிற் பாடப் பொத்தகமாக வைத்தற்கேற்ற வழி காண்க.

—ஞா. தேவநேயப் பாவாணர்.

(அட்டைப் பக்கத் தொடர்ச்சி.)

எழுப்பு வினையாகவும் கருதி ஐயா தம் மலைநாட்டுச் செலவை மேற் கொண்டுள்ளார்கள். மலையகம்வாழ் மாண்புறு தமிழன்பர்கள் ஐயாவை நன்கு பயன்படுத்திக் கொண்டு வரவேற்றும், சொற்-பொழிவு, பட்டிமன்று, பாட்டரங்கு, கருத்தரங்கு போன்ற நிகழ்ச்சி களில் பங்குபெறச் செய்தும் சிறப்பித்துத் தமிழரின் அனைத்து முன்னேற்றத்திற்கும் தம்மாலான துணைகளையெல்லாம் தவறாது ஆற்றி வைக்க வேண்டித் தாயகத் தமிழர் சார்பாக அயலகத்தமிழரை வேண்டி நிற்கின்றோம். அன்புள்ள,

ந. அரணமுறுவல். அமைச்சர்—'தென்மொழி'.

பெரியாரைப் பற்றிப் பிறர் கூறியவை.

[பெரியார் மறைவுக்குப் பின்னர் அவரைப் பற்றிப் பலதுறை அறிஞர் பெருமக்களும் செய்தித்தாள்களும் வெளியிட்ட கருத்துரைத் தொகுப்பு.]

கவர்ச்சி மிக்க தலைவர். எப்பொழுதுமே போராடியவர்.

—குடியரசுத் தலைவர். வி. வி. கிரி.

ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துகளை எதிர்த்து அறை கூவி நின்றவர் அவர். —தலைமை அமைச்சர். இந்திராகாந்தி.

நாடு மாபெரும் புரட்சியாளரை இழந்து விட்டது. வாழ்க்கை முழுதும் இந்து குமுகாயத்தில் புரட்சிகரமான மாறுதலை உண்டாக்கியவர் பெரியார். — நடுவணரசு அமைச்சர். செகசீவன்ராம்.

இடைவிடாமல் சாதிக் கொடுமைகளையும் மூட நம்பிக்கைகளையும் எதிர்த்துப் போராடிய வீரர்.

— நடுவணரசு அமைச்சர். சி. சுப்பிரமணியம்.

ஈ. வெ. இரா. ஆர்வமிக்க குமுகாயச் சீர்திருத்தக்காரர்.

— தமிழக ஆளுநர். கே. கே. சா.

குமுகாயச் சமநிலைக்காக அரும்பாடுபட்ட பெரியாரைத் தமிழகம் என்றும் மறக்காது. —புதுவை ஆளுநர். சேத்திலால்.

மிகச் சிறந்த குமுகாயப் புரட்சி வீரர்களில் ஒருவரை உலகம் இழந்து விட்டது. —பீகார் ஆளுநர். ஆர். டி. பண்டாரி.

பெரியாருடைய வாழ்க்கை உழைக்கின்ற எண்ணங் கொண்டோருக்கு ஊக்கந் தருகின்ற மாமருந்து.

—தமிழக முதல்வர். மு. கருணாநிதி.

எண்ணற்ற இளந்தலைவர்களை உருவாக்கியும், புதியதொரு விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்தும், சாதியின் பெயரால் கொடுமைகளுக்கு ஆளான குமுகாயத்திற்குப் புதுவாழ்வு தந்தவர் பெரியார் என்ற தனிமாந்தரே! —புதுவை முதல்வர். பரூக்.

சாதிக் கொடுமைகளையும், குமுகாயக் குறைபாடுகளையும் எதிர்த்து முடுக்கமாகப் போராடிய வீரர்.

—கேரள முதல்வர். அச்சுத மேனன்.

அவர்தாம் உண்மையான சீர்திருத்தக்காரர். சாதிமத வேறுபாடற்ற-மக்கட் பிரிவற்ற ஒரு மக்களின் அமைப்பை ஏற்படுத்த அயராது பாடுபட்டுழைத்த அஞ்சா நெஞ்சம் படைத்த ஒரு பெரியார்.

—கருநாடக முதல்வர், தேவராசு அர்சு.

பெரியார் தம் கொள்கைகளுக்காக மிகுந்த ஈடுபாட்டுடனும் துணிவுடனும் ஈடு இணையற்ற அறிவு நுட்பத்துடன் பாடுபட்டார்.
—ஆந்திர முதல்வர். வெங்களராவ்.

மூட நம்பிக்கைகளை எதிர்த்துப் போராடிய ஒருவரை இழந்து விட்டோம். —மகாராட்டிர முதல்வர். வி. பி. நாயக்கு.

தமது வாழ்நாள் முழுவதும் குமுகாயக் கொடுமைகளை எதிர்த்துப் போராடினார். —அரியானு முதல்வர். பன்சிலால்.

ஒரு மாபெரும் இந்தியரை நாடு இழந்து விட்டது.
—மேற்கு வங்க முதல்வர். சித்தார்த்த சங்கர் ரே.

தமிழ்க் குமுகாயம் மேம்பாடடைய அயராது உழைத்த மாபெருந் தலைவர். —பஞ்சாப் முதல்வர். செயில் சிங்.

பொதுத்தொண்டுக்கு வருபவர்களுக்குச் சரியான ஓர் எடுத்துக் காட்டு, அவர்! —அமைச்சர். இரா. நெடுஞ்செழியன்.

ஒரு தலை சிறந்த கருத்தாளரையும், சாதியுணர்ச்சியை எதிர்த்துக் கடுமையாகப் போரிட்ட ஒரு வீரரையும் நாடு இழந்து விட்டது. —வெங்காலூர் மாநகராட்சித் தலைவர்.

நமது நாட்டில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் குமுகாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தியதில் அவர் பங்கு மிகப் பெரியது.
—கு. காமராசர்.

ஒரு தலை சிறந்த குமுகாயச் சீர்திருத்தக்காரரை நாடு இழந்து விட்டது. —சங்கர் தயாள் சர்மா.

குமுகாய அடிமைத் தனத்திற்கு எதிரான பேருருவத்தை நாம் இழந்தோம். பழமையின் (வைதிகத்தின்) கொடுமை, அடக்கப்பட்ட மக்களின் இழிவு, மூடநம்பிக்கைகள், மக்களை நிலையான அடிமைகளாக வைத்திருக்கும் கடவுள் நம்பிக்கை ஆகியவற்றை எதிர்த்து குமுகாயச் சமன்பாட்டிற்காக அவர் நடத்திய அகன்ற போரின் தன்மை, நம் நாட்டின் வரலாற்றில் புகழ்மிக்க பசுமையான பகுதியாக என்றும் திகழும். தமிழக அளவில் மட்டுமின்றி அனைத்து இந்தியாவிலும் ஒப்பிட்டுக் காட்ட முடியாத தனித்தன்மை வாய்ந்த மிகச் சிறந்த தலைவர் அவர். —பி. இராமமூர்த்தி.

தமிழக வாலாற்றில் அவர் பதித்துள்ள பாதச் சுவடுகள் என்றும் அழியா. தமிழக வரலாற்றில் இந்த நூற்றாண்டின் தலையான உறுப்பாண்மை அவருடையது. அவர் பெயர் என்றும் நிலைத்து நிற்கும். —மணலி கந்தசாமி.

உலகில் தோன்றிய குமுகாயச் சீர்திருத்தப் புரட்சியாளர்களில் தலை சிறந்தவர் இவர். —ம. பொ. சிவஞானம்.

பகுத்தறிவு இயக்கத்தின் மாபெரும் ஆற்றலை நாடு இழந்து விட்டது. —பசவலிங்கப்பா.

தொடக்கத்தில் அவர் தேசியத்தையும் தெய்வத்தையும் போற்றுபவராக இருந்து, ஆள்பவர்கள் அவற்றைப் பயன் படுத்திச் செய்த தீமைகளைத் தாளாமல் வெளியேறி, மக்கள் ஆற்றலை முன் வைத்து, மாந்த இனம் மேம்படுவதற்காகக் காலமெல்லாம் கண் துஞ்சாமல் பாடுபட்டவர். —சத்திமோகன் (பார்வார்டு பிளாக் தலைவர்)

அவர் ஒரு நிறுவனம். —தமிழக மேனாள் முதல்வர் பத்தவத்சலம்.

பொது வாழ்வில் மிகவும் முடுக்கமாகப் பணியாற்றியவர்.
—கருநாடக மேனாள் முதல்வர் வீரேந்திர பாடீல்.

அவர் துணிவுமிக்க கருத்தாளர்; சிறந்த பேச்சாளர்; அஞ்சாத போராட்ட வீரர்; தன்மான இயக்கத்தை முழு மூச்சாகப் பரப்பியவர்!
—பி. டி. இராசன்.

தமிழகத்தில் அவருடைய முத்திரை பதியாத துறையே இல்லை எனலாம். கலக்க மில்லாத கருத்துப் பிடிப்பும், கடுமையான உழைப்பும் அவருக்கே உரிய குணங்கள். —குன்றக்குடி அடிகளார்.

மக்கள் மேம்பாட்டிற்கு உழைத்த மாவீரர். இந்துக்களில் தாழ்த்தப்பட்டவர், ஒடுக்கப்பட்டவர் என்ற நிலையில் இருந்த மக்களுக்காக அயராது உழைத்து அவர்களுக்குக் குமுகாயத்தில் உயரிய மதிப்பை ஏற்படுத்தியவர். —செயப்பிரகாசு நாராயணன்.

இந்திய மக்களைத் தட்டி யெழுப்பிய அவர் இறுதி நேரம் வரை போராடினார். —கோரா

தாழ்த்தப்பட்ட குமுகாயத்தின் வளர்ச்சிக்காகக் காலமெல்லாம் அரும்பாடு பட்டுச் சலியாமல் உழைத்தவர் பெரியார்.
—வி. இராமையா.

அவர் இழப்பு உழவர் இனத்துக்குப் பேரிழப்பு.
—மூக்கையாத் தேவர்.

மூடப்பழக்க வழக்கங்களையும், சாதி வேறுபாடுகளையும் கடைசி மூச்சு இருக்கும்வரை எதிர்த்துப் போராடியவர். —மன்ருடியார்.

தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப்புணர்ச்சி பெற அவர் பாடுபட்டார்.
—பி. கக்கன்,

பெரியாரின் மறைவு நாட்டின் பொது வாழ்விற்கு ஏற்பட்டுள்ள ஈடு செய்ய முடியாத இழப்பாகும். குமுகாயத்தில் நசுக்கப்பட்ட மக்களுக்காக அவர் ஆற்றிய பணிகள் என்றும் நினைவில் இருக்கும்.

—பி. இராமச்சந்திரன் (பழைய பேராயத் தலைவர்)

அவர் ஆற்றியுள்ள குமுகாயப் பணியினை அரசியல் தெளிவோடு, குமுகாயக் கடமை உணர்வோடு, அரசியல் ஊதியத்திற்கு இடமின்றி துடிப்புள்ள இளைஞர்கள் தொடர்ந்து ஆற்ற வேண்டும்.

—மணிவர்மா.

பெரியார் அவர்களது மறைவின் மூலம் இந்நாடு மிகச்சிறந்த குமுகாயச் சீர்திருத்தத் தலைவர் ஒருவரை இழந்துவிட்டது. குமுக நேர்மையின்மையை எதிர்த்துப் போரிட்ட மாவீரர் ஒருவரைச் சாவு நம்மிடமிருந்து பிரித்து விட்டது. —இராம் சேவக் யாதவ்.

ஐயா அவர்களின் மறைவால் பேரிருள் சூழ்ந்துள்ளது.

—அறிவழகன்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்து இந்துசமயம் மிகவும் இழிவான நிலையை அடைந்து வந்த நேரத்தில் பெரியார் வந்தார். தாங்கள் தனி வாழ்க்கையில் தூய்மையாக இருக்க வேண்டும் என்ற உணர்ச்சியை இறை நம்பிக்கையாளர்களுக்குக் கொடுத்தவர் பெரியார்தாம். எனவே பெரியாரின் இழப்பு இந்து சமயத்திற்கும் மாபெரும் இழப்பாகும். —கே. எப். சுப்பிரமணியம்.

மூடப்பழக்கம் சாதிமத வேறுபாடு ஆகியவற்றை ஒழிக்க அரும்பாடு பட்டவர் பெரியார். —கே. ஆர். நல்லசிவம்.

அரசியல் பதவி ஆசைகளுக்குத் துளியும் ஆளாகாமல் குமுகாய இழிவு நீக்க முழுக்க முழுக்கப் பாடுபட்ட தனிப்பெருந் தலைவர்.

—ஈ. வெ. கி. சம்பத்.

கடைசி மூச்சு காற்றிலே கலக்கும் வரை தமிழ்க் குமுகாயத்துக்காக உழைத்துக் கொண்டிருந்தவர். —எம். சி. இராமச்சந்திரன்.

இன்று தமிழர்கள் நெஞ்சு நிமிர்த்தி வீறுநடை போடுவதற்கு இவர் தாம் காரணம். —சிவாசி கணேசன்.

தமிழ் மக்களின் வாழ்வு உயரவும் வளம் பெறவும் தமது வாழ்நாளை ஈகம் செய்து கொண்ட பெரியார் அவர்களின் எண்ணம் ஈடேறும் வகையில் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்படுவோமாக!

—கண்ணதாசன்.

தமிழக உழைக்கும் மக்களை எண்ணத் தூண்டிய முதல் தலைவர் பெரியார். —குசேலர்.

அவர் ஒரு புதுவகை முன்னறிவிப்பாளர். தென்கிழக்கு ஆசியாவின் சாக்கிரடீசு. சீர்திருத்தத் தந்தை. அறியாமை, மூடநம்பிக்கை, பொருளற்ற குமுகாயப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றின் முதல் எதிரி.

—அனைத்து நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம்-(Unesco)

தம் மனத்திற்குப் பிடித்த கொள்கைக்காக அவர் கடமையுணர்வுடன் அயராது உழைத்து வந்தது பிறர்க்கு எடுத்துக் காட்டாக விளங்கக் கூடியதாகும். —தமிழ்நாட்டு சன சங்கம்.

எந்த் வகையில் பார்த்தாலும், எந்தக் கோணத்திலிருந்து ஆராய்ந்து பார்த்தாலும் பெரியார் பெரியார் தான். அறுபது ஆண்டுகளுக்கு மேலாக, குமுகாயத்தின் நல் வாழ்வுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் இடைவிடாது பாடுபட்ட தனிப்பெருந் தமிழர் அவர். தமிழ் இனத்தின் தலை குனிவுக்கான காரணங்களைக் கண்டு பிடித்து அதைப் போக்குவதற்கான தீர்வுகளை உறுதியுடனும் உள்ளத் தெளிவுடனும் வாழ்நாளெல்லாம் வலியுறுத்தி வந்தார் அவர். குமுகாயத்தில் நிலவும் சாதி வேற்றுமைகளைக் கண்டு உள்ளங் குமுறி எரிமலையாக அனல் கக்கியவர். மாந்தனை மாந்தன் அடிமைப் படுத்துவதற்கும் இழிவு படுத்துவதற்கும் கடவுள் நம்பிக்கைதான் காரணமாக இருக்கிறது என்று முடிவு செய்து, அதை வேரறுக்க, கருத்துப் பரப்புதலைத் தம் போர்க்கருவியாக ஆக்கிக் கொண்டவர். தம் பேச்சாலும் எழுத்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தன்மான உணர்ச்சியை ஊட்டித் தலை நிமிர்ந்து நடக்கச் செய்த சீர்திருத்த அரிமா அவர். அமைதியான முறையில் வியக்கத் தக்க குமுகாயப் புரட்சிக்கு வித்திட்ட மக்களரசுக் கொள்கையினர் அவர். பேச்சில் அனல் தெறித்தாலும், வன்முறைக் குரல் கேட்டாலும் அவர் என்றுமே வன்முறையாளராக இருந்ததில்லை. "இந்தத் தனியொருவரின் முயற்சியால் தமிழினம் விழிப்புற்று, எழுச்சியுற்றுப் பீடுநடை போட்டது" என்று வரலாற்றுசிரியர்கள் பெரியாரைப் பற்றிப் பெருமையுடன் எழுதத்தான் போகிறார்கள்.

உள்ளத்தி லிருப்பதைக் கள்ளங் கவடற்ற குழந்தையைப்போல் பேசியதால், அவர் பேச்சில் மழலை மிளிர்ந்தது. பிறர் பேசத் தயங்கியதை அவர் பச்சையாகக் கூறியதால் அம்மொழி கொச்சையாகவும் இருந்தது. பெரியாரின் மேடைப் பேச்சுக்கு இணையாக வேறொருவர் பேச்சைக் கூறமுடியாது. அதிலும் தனிவழி வகுத்தவர்

அவர் அந்தப் பேச்சு தாக்கப்பட்டவர்களைப் புண்படுத்தியதைவிட, மிகுதியாக எண்ணத்தூண்டியது. எல்லாவற்றுக்கும் மேலாக ஈ. வெ. இரா. மாந்தப் பண்புகள் நிறைந்த ஓர் உயர்ந்த மாந்தர். நல்லுள்ளமும் நகைச்சுவையும் நல்லொழுக்கங்களும் நிறைந்த ஒரு நிறை மாந்தர்.

அரசியலோடு தொடர்பு கொண்டிருந்தாலும், உள்ளத்தில் ஒன்று வைத்து உதட்டில் வேறொன்று பேசியறியாதவர். மனத் தூய்மையுடன் கைத் தூய்மையும் மிக்கவர். பதவிகளுக்கு ஆசைப் படாதவர். அரசியல் சட்டதிட்டங்களைத் துரும்பென மதித்தாலும் ஆட்சியிலுள்ளவர்களுக்கு மதிப்பும் பணிவும் காட்ட என்றுமே அவர் தவறியதில்லை.

பழமைக் கொள்கையாளர்களுக்கும், புரையோடிவிட்ட பழக்க வழக்கங்களுக்கும், சாதி வெறியர்களுக்கும், அரசியல் கவடர்களுக்கும் 'அரிமாக் கன'வாக வாழ்ந்த பெரியார், தமது பேரியக்கத்தைப் பொறுப்புணர்ச்சியோடும், நாட்டின் அமைதிக்கு ஊறு விளைக்காத வகையிலும் நடத்தி வந்ததை யாரும் மறுக்க முடியாது. குமுகாயத்தின் இழிவுகளைப் போக்க, அவர் கையாண்ட வழிமுறைகள் எல்லாராலும் ஒப்புக்கொள்ள முடியாமல் இருப்பினும் அவர் சுட்டிக் காட்டிய இலக்கும், ஏற்றிவைத்த அறிவுச் சுடரும், படைத்துத் தந்த மறுமலர்ச்சியும் தமிழகத்திற்கு மட்டுமின்றி, இந்தியாவிற்கே வழிகாட்டிகளாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

—ஆனந்த விகடன்.

அவரது உண்மையுணர்வை எவரும் எப்போதும் ஐயுற்றதில்லை. அவர்தம் சீர்திருத்தப் பணிகளின் மூலம் குமுகாயத்தில் ஒரு புதிய விழிப்பு ஏற்பட்டு, நல்ல பல திருப்பங்கள் தோன்றின என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்வர்.... பெரியார் ஓர் எரிமலையாக வாழ்ந்தவர். தனிநாடு கேட்பது போன்ற சில சமையங்களில் சீறி வெடிப்பார். ஆனால் பெரும்பாலும் தமது நம்பிக்கைகளைப் பரப்பும் பணிகளிலேயே அமைதியாகக் கழித்தார்......

—தினமணி.

He was a staunch critic of the caste system and devoted his considerable abilities to the mission of eradicating it. Force of circumstances led him from this base of demond like secession of Tamil Nadu, but this was never Practical once the D. M. K most of whose leaders were once his followers, disowned it.

—The Indian Express,

To achive his goal, whatever he did was sincere, devoted as he was to the cause which he esponsed.... He was fighted a compaigner of high calilse and Prolific writer. —The Mail.

தமிழகத்தின் மாமலை!.......அவர் தமிழக வரலாற்றில் தனிச் சிறப்புடைய இடத்தைப் பெறுவார் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருப்பதற்கில்லை. —சுதேசமித்திரன்.

குமுகாயப் பணி நடத்திய வரலாற்று நாயகன். பழைய கொள்கைகளின் சாக்குருவி. வேத புராணங்களைச் சடசடவென முறித்துப் போட்ட கொள்கைப் புயல்! —முரசொலி.

பதவிகளுக்காகப் பாதையை மாற்றாமல், எதிர்ப்புகளுக்கு அஞ்சிக் கொள்கையைக் கைகழுவாமல், இறுதிவரை வாழ்ந்த கொள்கைச் சுடர்! —அலை ஓசை.

உண்மைத் தமிழர்களுக் கெல்லாம் பெரியார் வீட்டுத் தலைவர். தமிழன் நேர்மைக்குப் பகையாக எந்தத் துறையில் கேடடைந்தாலும், அவன் பெரியாரை நினைக்காமல் இருக்க மாட்டான். —தமிழ் முரசு.

தமிழகத்தின் தனிப்பெருந் தலைவர். நான்கு கோடித் தமிழர்களின் நாயகன். —நவமணி.

மலைகுலைந்தாலும் நிலைகுலையாத மனத் திண்மையுடன், பகுத்தறிவுக் கொவ்வாத பழக்க வழக்கங்களையும் மூட நம்பிக்கைகளையும் சாடினார். தன்னலம் என்பது சிறிதளவும் இல்லாமல் தகர்த்தெறிவதில் ஈடுபட்டார். —நவசக்தி.

பெரியார் அவர்களின் அரை நூற்றாண்டுக்கும் மேலான குமுகாயப் பணியை, இந்தியாவில், ஏன், உலகத்தில் வேறு எந்தத் தலைவரும் செய்ததில்லை. பெரியாருடைய கருத்தை யொத்தவர்கள், வேறு யாராவது எந்த மாநிலத்திலாவது அல்லது எந்த நாட்டிலாவது இருந்தால் கூட என்றாவது ஒருநாள் அவர்களுடைய கருத்தை வெளியிட்டார்கள் என்று இருக்குமே தவிர, அல்லது ஏதோ பல வரிகளை எழுதினார்கள் என்றுதான் பார்க்க முடியுமே தவிர, பெரியாரைப் போல் தமிழகத்தின் காடுமேடு, சந்து பொந்து; மூலை முடுக்குகளெல்லாம் இடையறாது சுற்றிச் சுற்றிப் பம்பரம் போலப் பகுத்தறிவுப் பரப்பல் செய்தவர்கள் வேறு யாருமில்லை....அவரைப் போல் மிகுதியான பொதுக் கூட்டங்களில் பேசியவரும் இருக்க முடியாது.—நாத்திகம்

தமிழர் மாமலை! தன்மான இயக்கத்தின் தனிப்பெருஞ் சுடர்! பகுத்தறிவு விழிதிறந்த பகலவன். பெரியாரைப் பிரித்து விட்டால் தமிழகத்தின் புரட்சி வரலாறு வெளிவர முடியாது.

—புரட்சி மலர்.

அவர் எல்லாக் காலமும் இராமனையே (பழிப்பதற்காக) நினைந்து வந்ததாலோ என்னவோ உயர்திரு. ஈ. வே. இரா. அவர்கள் இராம 'பக்த' அனுமானின் திருநாளன்று அமரராகி யிருக்கிறார். இஃது இறைவனின் அருட்செயலன்றி வேறாக இருக்க முடியாது. ....அவருக்குக் கோவில்களிலும் தெய்வங்களிடமும் நம்பிக்கை யில்லை என்று அவரே சொல்லிக் கொண்ட போதிலும் ஈரோட்டில் அவருடைய குடும்ப ஆளுமையில் இருந்து வரும் கோவில் மிகவும் செம்மையாகவும் ஒழுங்காகவும் காக்கப்பட்டு வருகிறது. அவருடைய முடுக்கமான 'நாத்திக'ப் பரப்புதல், பலரை முடுக்க மான 'ஆத்திகர்க'ளாக மாற்றவும் தூண்டுதலாயிருந்திருக் கின்றது.

—கல்கி.

சாதி, மதம், தீண்டாமை, 'சாத்திரம்', 'கோத்திரம்'—என்பவை எல்லாம் மாந்த வாழ்விற்குப் பெரும் முட்டுக்கட்டைகள் இவற்றைத் தகர்த்தெறிய வேண்டும் என்று தமிழ் நாட்டில் முதல் முதலாக நினைத்தவர் ஈரோடு ஈன்ற இளம் அரிமா ஈ. வே. இராமசாமிப் பெரியார் ஒருவர்தாம்! காந்தியடிகளைக் கூட இவருக்குப் பின்னர்தான் வைக்க வேண்டும்.

—மூலிகை மணி.

ஊருக்குத் தகுந்தாற்போல் மேடைக்குத் தகுந்தாற் போல், வந்திருக்கும் கூட்டத்திற்குத் தகுந்தாற்போல் தங்கள் பேச்சுக்-களைச் சிறிதும் வெட்கம் இல்லாமல் மாற்றிக் கொள்ளும் பேச்சாளர்கள் நிறைந்த நம் நாட்டில், எங்குப் பேசினாலும் சரி, எவர் வந்தாலும் சரி, தமது கருத்தை மண்டையி லடித்தாற் போல் கூறும் துணிவு கொண்டிருந்தவர் திரு. ஈ. வே இரா.

—துக்ளக்.

(இவற்றுள் Hindu நாளிதழ் ஒன்றுதான் தன்னை முழுக்க முழுக்க ஆரியச் சார்பினதாகக் காட்டிக் கொண்டு பெரியாரைப் பற்றி ஒரு சொல்லாலும் புகழ்ந்துரைக்க மனங்கொளாத தன்மையை உண்மைத் தமிழர்கள் நீங்காத நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்!

—ஆர்.)

செய்திகள்.

1. பு.புளியம்பட்டி - மறைமலையடிகள் மன்ற உறுப்பினர்களின் ஒப்புரவு முயற்சி:

கோவை மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டியில் ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகளாகச் செயலாற்றிவரும் மறைமலையடிகள் மன்ற உறுப்பினர்கள், அண்மைக்காலத்து மன வேறுபாடு கொண்டு இரு கூறுகப் பிரிந்து, மன்ற நடவடிக்கைகளை நிலைகுத்திப் போகும்படி செய்தனர். அவர்களின் மனக்குறைகளைக் கேட்டு, மன்றத்தை ஒற்றுமைப் படுத்தும் முயற்சியில் உள்ளூர் பாராளு மன்ற சட்ட மன்ற உறுப்பினர்களும் மறைத்திரு.ப.சு.மணியம், மறைதிருநாவுக்கரசு போன்ற சான்றோர்களும் ஈடுபட்டு முடிவு காணுமல் வருந்தினர். தனித்தமிழுக்கும் சைவ சமயத்திற்கும் மிகப் பயனுடைய வகையில் அருந்தொண்டுகள் பல ஆற்றி வந்த மன்றம் இடையிலேற்பட்ட பூசல்கள் காரணியமாகச் செயலற்று நின்றதைக் கண்டு, மொழிப் பேரறிஞர் பாவாணர் உட்பட அறிஞர் பலரும் மனம் கசிந்து நின்றனர். இந்நிலையை நீடிக்க விடாமல் ஆசிரியர் பெருஞ்சித்திரனுர் அவர்கள் புளியம்பட்டி சென்று 25—11—73 முதல் 27—11—73 முடிய மூன்று நாள் இரவுகளும் மன்ற உறுப்பினர்களுடன் தனித்தனியாகவும் கூட்டாகவும் தொடர்ந்து பேச்சுகள் நடத்தி, ஒவ்வொருவருடைய குறைகளையும் கேட்டுத் தெளிந்து, இறுதிநாள் இரவு விடியல் 5 மணியளவில் மன்றத்தை ஒப்புரவுப் படுத்தினுர்கள். அக்கால் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் மனந் திறந்து பேசி, பழைய முறையில் மகிழ்வுடன் உறவாடியும், இதுநாள் வரை மன்றத்தில் பூசல்கள் விளைவித்துக் கொண்டதற்கு வருத்தம் தெரிவித்தும் ஆசிரியரை வழியனுப்பி வைத்தார்கள். மன்றம் மேலும் தொடர்ந்து தமிழ்த் தொண்டில் ஈடுபட வாழ்த்தி ஆசிரியர் விடைபெற்றுக் கொண்டது குறிப்பிடத் தக்கது.

2. திருவாரூர் திரு.வி.க. சிலை திறப்பு விழா:

தஞ்சை, திருவாரூர், இயற்றமிழ்ப் படிப்பகத்தார், தமிழ்த்தென்றல் திரு.வி.க.வுக்கு ஒரு படிமம் நிறுவும் முயற்சியில் இறுதியாக வெற்றி பெற்று, கடந்த நளி.17 (2.12.73) ஞாயிறு அன்று, விழா நடத்திச் சிலைதிறப்புச் செய்வித்தனர். இம் முயற்சியில் ஈடுபட்டு மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, இறுதி வாகை சூடிய இயற்றமிழ்ப் பயிற்றக ஆசிரியர், புலவர் உயர்திரு. த. சரவணத் தமிழனுரை எவ்வளவு பாராட்டினும் தகும். திரு.வி.க படிமத்தை, தவத்திரு. குன்றக்குடியடிகளார் தலைமையில், தமிழக முதல்வர் மு. அருட்செல்வனுர் (கருணாநிதி) அவர்கள் ஞாயிறு மாலை, திருவாரூர்-தஞ்சைச் சாலையில் திறந்து வைத்தார்கள்.

அன்று காலை நடந்த ஆய்வரங்குக்கு தவத்திரு. குன்றக்குடியடிகளார் தலைமையேற்க, பன்மொழிப்புலவர் கா. அப்பாத்

துரையார், திருக்குறள் வீ. முனிசாமி, திரு. சுத்தானந்த பாரதியார், கி. ஆ. பெ. விசுவநாதம், திரு. நாரணதுரைக் கண்ணன், திருவாட்டி, அலர்மேல் அப்பாத்துரையார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மாலை நடந்த பாப்பட்டி மன்றத்திற்கு திரு. பெருஞ்சித்திரனார் நடுவராக இருக்க, "திரு.வி.க.வின் தொண்டில் பெரும் பங்கு மொழித்தொண்டா, பொதுத்தொண்டா?" என்னும் தலைப்பில் புலவர் பலரும் அளவையாடினர்.

பாவலர் திரு. கோவை-இளஞ்சேரனார், புலவர் திரு. இறைக்குருவனார், புலவர். திரு. தொல்காப்பியனார் ஆகிய மூவரும் மொழித்தொண்டே என்றும்,

பாவலர். திரு. பாலசுந்தரனார், பாவலர் திரு. தரங்கை-பன்னீர்ச்செல்வனார், புலவர். திரு. ஞானச்செல்வனார் ஆகிய மூவரும் பொதுத்தொண்டே என்றும், தருக்க மிட்டனர். இறுதியில் நடுவர் திரு.வி.க. மொழித்தொண்டை அகத்திலும், பொதுத்-தொண்டைப் புறத்திலும் தாங்கியே வாழ்வு நடாத்தினார் என்று தீர்ப்புச் செய்தார்.

பட்டிமன்றம், முதலமைச்சர் கலைஞர், கூட்டுறவுத்துறை யமைச்சர் மன்னை. நாராயணசாமி, மொழிஞாயிறு பாவாணர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. பாப்பட்டி மன்றத்திற்குப் பின்னர் மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் மாநாட்டு மலரை வெளியிட்டு, முதல்வர் அவர்களுக்கு முதற்படியினை அளித்துச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். அதனை யடுத்து, அமைச்சர் மன்னையும் கலைஞரும் சொற்பெருக்காற்றினர். மாண்புமிகு முதல்வர், மொழிஞாயிறு பாவாணரின் செ.சொ.பி. அகரமுதலிக்கு அரசு எல்லாவகையிலும் உதவியளிக்கும் என்று உறுதி யளித்துப் பேசியது குறிப்பிடத் தக்கது. மாலை விழாத் தொடக்கத்தில் சிற்பிகள் திரு. வேங்கடேசன், திரு. செகநாதன் அவர்களுக்கும், மலர் அச்சீட்டாளர், திரு. வ. கணேசன் அவர்களுக்கும் முதலமைச்சர் அவர்களால் பொற்கோட்டுப் பட்டாடைகள் போர்த்-துவிக்கப் பெற்றன.

8. ப.கு. முருகவேள்-ம. ஞானம்-நீடுவாழி!

கடந்த நளித்திங்கள் 20-ஆம் பக்கல் (5—12—73) அன்று, பழனி வடக்குத் தேர்த்தெரு, மல்லி மடத்தில் ஆசிரியர். பெருஞ்சித்திரனார் முன்னிலையில், நெடுநாளையத் தென்மொழி யன்பரும் புன்செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்ற உறுப்பினரும், கோவை மாவட்ட உ.த.க. அமைப்பாளருமாகிய திரு. ப. கு. முருகவேளுக்கும், செல்வி. ம. ஞானத்திற்கும் திருமணம் சிறப்பாக நிகழ்ந்தது. மணமக்களை வாழ்த்தி ஆசிரியர் அவர்கள்

அரியதொரு சொற்பொழிவாற்றினர். திருமண நினைவாக மணமக்கள் உரு: 50-ஐத் தென்மொழி வளர்ச்சிக்கென நன்கொடையாக அளித்தனர். மணமக்கள் நீடுவாழத் தென்மொழி உளமார வாழ்த்துகிறது.

4. மறை-நித்தலின்பன்-தேவகாந்தி-நீடு வாழ்க!

கடந்த நளித்திங்கள் 27 (12—12—73) அறிவன்கிழமை, கோவை, ஆவாரம்பாளையம் சாலையில் உள்ள இராமகிருட்டிண திருமண மண்டபத்தில், நெடுநாளைய தென்மொழி யன்பரும், புரக்குநரும் ஆகிய **மறை. நித்தலின்பன்** அவர்களுக்கும், செல்வி. **தேவகாந்திக்கும்,** திருமணம் சீரும் சிறப்புமாக நடந்தேறியது. மணவிழாக் கரணமுறை மறைத்திரு. **ப. சு. மணியம்** அவர்களால் நிகழ்த்தப் பெற்றது. இத்திருமண விழா நினைவாக, திரு. **பெருஞ்சித்திரனார்** அவர்கள் எழுதிய **மகபுகுவஞ்சி** எனும் இலக்கிய நூலை, மொழிநூல் மூதறிஞர், திரு. **ஞா. தேவநேயப்பாவாணர்** அவர்கள் வெளியிட்டு மணமக்களை வாழ்த்திப் பேசினார். அந்நூலின் முதற்படியினைப் பெற்றுக்கொண்டு பேரா. **வீ. அரசமாணிக்கம்** அவர்கள் மணமக்களை வாழ்த்தும் முகத்தான், நூலின் சிறப்பியல்களைப்பற்றி உரையாற்றினார், அடுத்து **மறை. திருநாவுக்கரசு** மணமக்களை வாழ்த்தினார். அதன்பின், நூலாசிரியர் திரு. **பெருஞ்சித்திரனார்** நூலின் படியினை மணமக்களுக்கு அன்பளிப்பாக வழங்கி வாழ்த்திப் பேசினார். அடுத்துப் புலவர். திரு. **ப.சு. மணியம்** அவர்கள், வாழ்த்துரைத்தார். இறுதியாக **மறை. நித்தலின்பன்** அவர்கள் வந்திருந்த அனைவர்க்கும் நன்றியுரைக்க மணவிழா இனிது முடிவுற்றது. மணமக்கள் நித்தலும் இன்புற்று நீடு வாழத் தென்மொழியும் வாழ்த்துகின்றது.

5. தமிழ் மறவர் வை. பொன்னம்பலனார்-நினைவு நாள்

மறைந்த **'தமிழ்மறவர்'** புலவர் **வை. பொன்னம்பலனார்** அவர்களின் நித்தார் நினைவு நாள், கடந்த திசம்பர் 16 ஞாயிறன்று செந்துறை, தொடக்கப் பள்ளியில் நடந்தது. விழாவிற்கு திரு. **ப.மு. சாந்தானந்தம்** தலைமை தாங்கினார். உயர்திருவாளர்கள் **செ. சதாசிவம்** (சட்ட மன்ற உறுப்பினர்), **கோ. சிவப் பெருமாள்** (ச.ம உ.) ஆகியோரும் தி.க. தலைவர் திருச்சி **வே. ஆனைமுத்து** முதலியோரும் கலந்து கொண்டனர். தென்மொழி ஆசிரியர் திரு. **பெருஞ்சித்திரனார்** அவர்கள் தமிழ்மறவர் **வை. பொன்னம்பலனார்** அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்து இரங்கலுரையாக, மறைந்த புலவரின் தனித்தமிழ்த் தொண்டினையும், இனத்தொண்டினையும் ஒருங்கே பாராட்டிப் பேசினார்கள். அவரைத் தொடர்ந்து அங்கு வந்திருந்த சட்டமன்ற உறுப்பினர்கள், புலவர்கள் தி. க, தி.மு.க தலைவர்கள் பலர் மறைந்த தமிழ்மறவர் அவர்களின்

சிறப்பியல்களைக் கூறி, அவர் குடும்பத்திற்கு ஆறுதல் கூறினர். இறுதியாக, அங்குக்குழுமியிருந்த பெரியோர்களின் ஒப்புதலுடன் "தமிழ்மறவர். புலவர். வை. பொன்னம் பலனுர் குடும்ப நலக்கொடைக் குழு" என்ற அமைப்பை உருவாக்கி, அன்னரின் குடும்பத்திற்குப் பொருள் திரட்டித் தருவதென ஒருமனமாக முடிவு செய்யப் பெற்றது. கொடைக் குழுப் பொறுப்பாளர்களாகக் கீழ்க் காணுவோர் ஒருமுகமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

தலைவர்: திரு. என். கிருட்டிணமூர்த்தி (செந்துறை ஒன்றியப் பெருந்தலைவர்.)

துணைத் தலைவர்கள்:

திரு. பெருஞ்சித்திரனுர் 'தென்மொழி' ஆசிரியர்.
திரு. எசு. சிவசுப்பிரமணியம். க.மு; ச.இ.
திரு. வி. சீனிவாசன். க.மு; ப.இ.
திரு. எசு. இராமலிங்கம். முன்னுள் சட்டமன்ற உறுப்பினர்.

செயலர்: புலவர். திரு. சி. கேசவன்.

துணைச் செயலர்கள்:

திரு. சி. பி. சர்வாதிகாரி.
திரு. கு. பாலகிருட்டிணன். க. இ. ப.இ.

பொருளர்: திரு. புலவர். பூ. பொய்யாமொழி.

செயற்குழு உறுப்பினர்கள்: செ. சதாசிவம் (ச.ம.உ.); கோ. சிவப்பெருமாள் (ச.ப உ); ப. மு. சாந்தானந்தம்; சேலம் தி. வை. சொக்கப்பா; செயங்கொண்டம் கே. என். இராமச்சந்திரன் க.மு; சேலம் கே. பச்சைமுத்து; ஆத்தூர் வி. செல்லமுத்து; முசிறி புலவர் கிருட்டிணன்; திருமானூர் வே. தம்புசாமி, திருச்சி. புலவர். து. தயாளசாமி; மீன்சுருட்டி ந. கணபதி; அரியலூர் பெ. முத்துக் குமாரசாமி, க.இ; ச.இ; வேலூர் பி. ஆர். கந்தசாமி க.மு; சென்னை அ. மெய்யப்பன்; திருச்சி கே. கோவிந்தராசலு; இரும்புலிக்குறிச்சி ந. உத்திராபதி; துங்கபுரம் எசு. செவ்வண்ணன் அறி.இ; ப.இ; அரியலூர் மு. சிங்காரம்; அந்தூர் கி. இராமசாமி; கோவில்பாளையம் இராம. நடராசன் க.மு; ப.இ; குமிழியம் கோ. நெடுஞ்செழியன்; தா. பழூர் செ. சாமிநாதன்; சிதம்பரம் என். வி. இராமசாமி; பொத்தனூர் க. சண்முகம்; திருச்சி வே. ஆனைமுத்து. க.இ.– ஆகியோர்.

தமிழ்மறவர் பொன்னம்பலனுர் அவர்கள் குடும்பத்திற்கு நன்கொடை வழங்க விரும்பும் அன்பர்கள் புலவர் பூ. பொய்யாமொழி, பொன்பரப்பிக்குடிக்காடு-(அஞ்); (வழி) பொன்பரப்பி– 621710; திருச்சி மாவட்டம்–என்னும் முகவரிக்கு விடுக்கக் கேட்டுக் கொள்ளப் பெறுகிறுர்கள். (24–ஆம் பக்கம் பார்க்

தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக்
கருத்தரங்குச் சொற்பொழிவுகள்: (தொடர்ச்சி)

0 வெறும் கருத்தரங்குகளால் இதுவரை எந்தப் பயனும் விளைந்ததில்லை.

0 தமிழன் வடநாட்டானுக்கு அடிமையாயிருக்கும் வரை, அவன் நம் கருத்துகளையும், நம் உரிமைகளையும் காதுகளிலேயே போட்டுக் கொள்ள மாட்டான்.

0 திண்ணையிலே இடம் கேட்டு உட்கார்ந்தவன் வீட்டையே தனக்குச் சொந்தம் என்பதா?

0 பாவாணர் போன்ற அறிஞர்கள் வேண்டுமானால் கருத்தரங்கை நம்பியிருக்கட்டும்; இளைஞர்கள் போராடித்தான் உரிமைகளைப் பெற முடியும்.

0 நிலை இப்படியே போனால் தமிழன் என்றொருவன் இருக்கின்றானா என்று கேட்கப் படுகின்ற நிலை வந்தாலும் வரும்.

0 எனவே, இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டுமானால், தமிழகத்தை வடநாட்டான் ஆளுகையினின்று பிரித்தே ஆக வேண்டும்.

0 தஞ்சைக் கருத்தரங்கில் பெருஞ்சித்திரனார் முழக்கம்!

தஞ்சையில் கடந்த சிலை சுள (31—12—72) அன்று நடந்த தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக் கருத்தரங்கில் பெரும்புலவர் நீ. கந்தசாமியார் அவர்களின் தலைமையில், தென்மொழி ஆசிரியர் பெருஞ்சித்திரனார் ஆற்றிய சொற்பொழிவு:

பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய தலைவர் அவர்களே! வணக்கத்திற்குரிய பாவாணர் அவர்களே! அறிவியல் முனைவர் கோ. து. அவர்களே! மற்றும் இங்குக் கூடியிருக்கும் பேராசிரியப் பெருமக்களே! புலவர் பெருமக்களே! தமிழன்பர்களே! தாய்மார்களே! உங்கள் அனைவர்க்கும் என் பணிவான வணக்கம்.

இந்த மாநாடு தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக் கருத்தரங்கு என்ற பெயரிலே கூடியிருக்கின்றது. இது மிகவும் தேவையான ஒரு மாநாடாக இருந்தாலும் கூட, இந்த மாநாட்டு நடைமுறைகளும், இதனுடைய முடிவான கருத்து அறிவிப்பும் பெரிதும் வருத்தத்திற்

குரிய செய்தியாக எனக்குப் படுகின்றது. ஏனென்றல், கடந்த காலத்திலெல்லாம் யாரையோ ஒருவனைப் பார்த்து அவன் எங்கிருந்தோ வந்தவன் என்று சொல்லிக்கொண்டிருந்தவர்கள் நாம். ஏதோ மழைக்காக-இருளுக்காக அஞ்சி, நம்முடைய திண்ணையிலே, வெளிப்புறத்திலே வந்து ஒன்ற வந்தவன் போலிருந்து, அத்திண்ணையிலே கொஞ்சம் இடம் கேட்டு உட்கார்ந்து கொண்டு, இப்பொழுது, வீட்டிலுள்ள நம்மைப் பார்த்து, "இந்த வீடு எனக்குச் சொந்தமா? உனக்குச் சொந்தமா? உனக்குச் சொந்தமில்லை; நீ வெளியிலே வா; ஒரு வேளை நான் இதற்குச் சொந்தமாக இருப்பேன்" என்று சொல்லக் கூடிய அளவிலே, சொல்லுகிறது போலவும், நாம் "இல்லை, எங்களுக்குத்தான் சொந்தம்" என்று தருக்கமிட்டுக் கொண்டு இருப்பது போலவும் ஆகிய ஒரு நிகழ்ச்சியை நினைவூட்டுகின்றது இம் மாநாடு.

"தமிழ் தன்னுடைய நிலையிலே வளர வேண்டும்; அதற்குரிய பெருமையைப் பெற வேண்டும்" என்று போராடிக் கொண்டிருக்-கின்ற இந்த நேரத்திலே "தமிழ் எங்குப் பிறந்தது? தமிழன் எங்குப் பிறந்தான்?" —என்று ஆய்கின்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டவர்களாக இருக்கிறோம். 'தமிழனுடைய பிறந்தகம் இதுதான்' என்பதிலே ஒரு சிறிதும் ஐயமில்லாமல் இருந்த அந்த நிலை போய், இப்பொழுது 'தமிழனும் வேறு எங்கோ இருந்து இங்கு வந்தவன்' என்று சொல்லக் கூடிய ஒரு கருத்தும் "அப்படியில்லை; இங்குதான் இருந்தான்; இதுதான் அவனுடைய பிறந்தகம்" என்று நாம் எதிர்த்துச் சொல்லக் கூடிய ஒரு நிலையும் நமக்கு உண்டாகியிருப்பது, மிகவும் வருத்தத்திற்குரிய ஒரு செய்தி.

தமிழனுடைய பிறந்தகம் எது? அதைத் தீர்மானிக்கப்பட வேண்டியவர் யார்? என்கின்ற நிலையெல்லாம் இப்பொழுது இல்லை. தமிழன் இப்பொழுதிருக்கின்ற இந்த நிலையைக்கூட வலுப்படுத்திக் கொள்வானு என்று வருந்திக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் நடந்த அந்தச் செய்தியைப் பற்றிப் போரிட்டுக் கொண்டிருப்பவர்களாக நாம் இருக்கின்றோம். இனி, தமிழன் என்று ஓர் இனம் இருக்கின்றதா என்று ஐயப்பட்டு அதை நிலை நாட்டுகின்ற ஒரு கருத்தரங்கு நடந்தாலும் நடக்கும். 'தமிழன் பிறந்தகம் குமரிக்கண்டமா' என்கின்ற கருத்தரங்கு நடைபெறுகின்ற நிலை போய், தமிழன் என்று ஒருவன் இருக்கின்றானு என்று ஆய்வு நடத்தக்கூடிய நிலைக்கே நாம் வந்தாலும் வருவோம். இதையெல்லாம் ஒட்டுமொத்தமாக எண்ணிப் பார்க்கின்ற பொழுது, தமிழன் தன்னுடைய பெருமையை மறந்துவிட்டு எவ்வளவு கீழ்த்தரமான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றான் என்று கருதி வருந்த வேண்டியுள்ளது.

இது தொடர்பாகக் காலையிலிருந்து மாலையில் பேசிய கருத்-துரைகள் முடிய, அருமையான விளக்கங்களை-இவற்றை விட வேறு விளக்கங்கள் தேவையே இல்லையென்று சொல்லுமளவிற்கு-அறிஞர்கள் பலரும் நமக்குத் தந்தார்கள். இருந்தாலும் கூட, இந்த விளக்கங்கள் பாவாணர் அவர்கள் நினைத்துக்கொண்டு இருப்பது போல, இனிமேல் உலக முழுவதும் ஏற்றுக் கொள்ளும் முடிவான விளக்கங்கள் என்று கொள்வதற்கில்லை. இன்னும் பல நூல்கள் நாளுக்குநாள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. இன்னும் பல கருத்துகளை நாள்தொறும் சொல்லிக் கொண்டே இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட கருத்துகளையெல்லாம் அப்பொழுதைக் கப்பொழுது நாம் மறுத்துக் கொண்டே யிருக்க வேண்டும் என்ற நிலை இருக்குமே தவிர, இந்தப் போராட்டத்திற்கு முடிவே இருக்காது. எனவேதான் இத்தகைய நிலைகளைப்பற்றி யெல்லாம் கவலைப் படாமல் இருக்கும் படியான ஒரு நிலைக்கு நாம் வந்தாலொழிய வேறு எந்தப் பயனும் இவ்வகைக் கருத்தரங்குகளால் ஏற்படவே போவதில்லை.

இனி, பாவாணர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கின்றேன். இந்தக் கருத்துகளை இனி ஒரு கருத்தரங்கப் போராட்டமாக நடத்திக் கொண்டிருக்க வேண்டுவதில்லை. இந்தக் கருத்துப் போராட்டம் வேண்டுமானால் அறிஞர்கள் அளவிலே நிகழ்ந்து கொண்டிருக்கட்டும். ஆனால் நம்மைப் போன்ற இளைஞர்கள் நமக்கு இருக்க வேண்டிய உரிமைகளை நாமே பெற்றுக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இளைஞர்களும் சேர்ந்து வாயளவிலே, அல்லது நூலளவிலே இத்-தகைய கருத்துகளுக்காகச் சொற்போராட்டங்கள் நிகழ்த்திக் கொண் டிருப்பது, நம் ஆற்றல்களையும் காலத்தையும் வீணடிக்கின்ற செயலாகவே எனக்குப் படுகின்றது. எனவேதான் என்னுடைய நோக்கும், போக்கும் வேறு அளவிலே, விரைவிலே இதற்கு ஏதாவது ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும்-தமிழகத்தை எப்படியாகிலும் வடநாட்டார் ஆளுகையினின்று பிரித்தே ஆக வேண்டும்—இல்லா விட்டால் நமக்கு எந்த வகையான நன்மையும் ஏற்படப் போவதில்லை என்ற அளவிலே போய்க் கொண்டிருக்கின்றன. (பெருத்த கையொலி) மற்றபடி, இப்படிப் பட்ட கருத்துப் போராட்டங்களை நாம் நடத்தி நடத்தி, நம்முடைய கருத்துகளுக்கு நேர் எதிரிடையான கருத்துகள் வடநாடுகளிலும், வெளிநாடுகளிலும் எதிரிகளால் பரப்பப்பட்டு வருகின்ற அந்த நிலைகளை நாம் தடுத்து நிறுத்திவிட முடியாது. நமக்குள்ள அடிப்படை உரிமைகளை மொழி, இனம், நாடு என்ற மூவகை நிலைகளிலும் நமக்குள்ள உரிமைகளை நாம் பெற்றாலொழிய, நாம் எத்தகைய மாநாடுகள் கூட்டி, எவ்வளவு வலிவான-உண்மை யான கருத்துகளைச் சான்றுடன் நிறுவினாலும் அவற்றிற்கு வெற்றி கிட்டப் போவதே இல்லை. இவற்றுக்குச் செயலளவில் நாம் ஒரு முடிவு கட்டியாக வேண்டும். இதுதான் என்னுடைய முடிவான

கருத்து. பாவாணர் அவர்கள் பேசச் சொன்னதற்காக இதையும் இங்குச் சொல்ல வேண்டியவனாக இருக்கின்றேன்.

மற்றபடி, தமிழனுடைய பிறந்தகம் குமரிக் கண்டந்தான் என்று அவனுக்குப் பன்னிப் பன்னிச் சொன்னாலும், அவன் ஆளுகையில் நாம் உள்ளவரை, மாற்றான் அதை ஒப்புக்கொள்ளப் போவதில்லை. இக் கருத்துக்கு வலிவான சான்றுகளைப் பாவாணர் அவர்கள் தம் நூல்கள் எல்லாவற்றிலும் பல இடங்களிலும் காட்டியிருக்கின்றார்கள். மீண்டும் மீண்டும் அவற்றையே சொல்லிக் கொண்டிருப்பதில் நமக்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. எனவே இந்த வகையில் கருத்துப் போராட்டத்தைவிடக் கைப்போராட்டமே நாம் செய்ய வேண்டுவது என்று கூறி முடித்துக் கொள்கின்றேன். வணக்கம். O

(20-ஆம் பக்கத் தொடர்ச்சி)

6. பொன்பரப்பி உயர்நிலைப்பள்ளி இலக்கிய மன்றத் தொடக்க விழா:

கடந்த திசம்பர், 17 திங்கட்கிழமை பொன்பரப்பி உயர்நிலைப் பள்ளியில் இலக்கிய மன்றத் தொடக்க விழா பள்ளித் தலைமை யாசிரியர். திரு. புகழேந்தி தலைமையில் நடந்தது. பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வரவேற்புரை கூறினார். தென்மொழி ஆசிரியர் திரு. பெருஞ்சித்திரனார் "என்றுமுள தென்றமிழ்" என்னும் தலைப்பில் ஏறத்தாழ இரண்டு மணி நேரம் அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மாணவர்கள் மிக அமைதியுடன் இருந்து ஆர்வத்துடன் சொற்பொழிவைக் கேட்டது குறிப்பிடத் தக்கது.

7. எழிலிறையன் நீடுவாழி!

கடந்த துலை. 18-ஆம் பக்கல் (3—11—73) காரியன்று பெரும்பகல்லா தென்மொழியன்பர் திரு. சுடர்மாலிறையனுக்கும், திருவாட்டி. எழில் முதல்விக்கும் ஆண் மகவு பிறந்து அம்மகவிற்கு 'எழிலிறையன்' என்று பெயர் சூட்டியதன் நினைவாக தென்மொழிக்கு உரு 5-00 நன்கொடை யளித்துள்ளனர். எழிலிறையன் நீடுவாழ தென்மொழி நெஞ்சார வாழ்த்துகிறது.

8. செல்வன் கதிரவனுக்கு இரங்கல்....

கடந்த நளி 18ஆம் பக்கல் (3—12—73) திங்களன்று உரத்தநாடு தென்மொழியன்பர் திரு. ப. இளம்வழுதிக்கும், திருவாட்டி. கலைமணிக்கும் கதிரவன் என்னும் ஆண் மகவு பிறந்து, 20—12—73 அன்று இறந்த செய்தியறிந்து பெரிதும் வருந்துகின்றோம். பெற்றோர் செல்வன் கதிரவன் நினைவாக உரு. 25-00ஐ தென்மொழிக்கு விடுத்துள்ளனர். துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் பெற்றோர்க்கும் பிறர்க்கும் தென்மொழி தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ் அகரவரிசை பிறமொழியைப் பின்பற்றியதா?

—"செங்குட்டுவன்"

தமிழ் அகரவரிசை பிறமொழியின் அகரவரிசையைக் கைக்கொண்டதா (Is the Tamil alphabet system an adaptation?) என வினவி அண்மையில் வெளிவந்த தமிழாய்வு மலரில் (Journal of Tamil studies, December 1972) தம் கட்டுரையைத் தொடங்கும் பர். தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் பிறமொழியைப் பின்பற்றியதே என்பதற்கான சான்றுகளை முன்மொழிகிறார்.

1. அரிக்கமேட்டு அகழ்வாய்விலும் தமிழ்க் குகைக் கல்வெட்டுகளிலும் கண்ட எழுத்துகளுக்கும் பிராமி எழுத்துகளுக்கும் உள்ள ஒற்றுமையைக் கொண்டு, அசோகரால் பிராகிருதமொழியை எழுதப் பயன்படுத்தப் பட்ட பிராமி வரியன்களில் இருந்தே தமிழ் வரியன்கள் தக்கமாறுதலுடன் கைக்கொள்ளப்பட்டன என்று கல்வெட்டாராய்ச்சியாளர்களும் பிறரும் கருதுகின்றனர்.

இவர்கள் தமிழ் வரியன் தானே பிறமொழியைப் பின்பற்றியதெனக் கூறினார்கள்! தமது நுண்மாணுழை புலத்தால் (!) தமிழ் அகரவரிசையே பிறமொழியைப் பின்பற்றியது என நிறுவியே தீருவேன் என வரிந்து கட்டும். பர். தெ. பொ. மீ. இதற்கான சான்றுகளைத் தேடிப் பிடிக்கத் தொன்னூலான தொல்காப்பியத்தை அலசுகிறார்:

2. தமிழ் வரியன்களுள், எகரக் குறிலையும் (எ) ஒகரக் குறிலையும் (ஒ) குறிக்க அவ்வந் நெடில்களுக்கான (எ,ஒ) வரியனின் மீது புள்ளியிட்டு வேறுபடுத்தினர் (தொல்காபியம்: நூற்பா (16). ஏனைய உயிர் வரியன்களில் நெடிலுக்கே கூடிய குறியிருக்க, இங்கே குறிலுக்குக் குறிகூடுவது எதைச் சுட்டுகிறது? ஏ, ஓ அடிப்படையாகவும், ஆனால் அவற்றின் குறில்களான எ, ஒ இல்லாததாகவும் உள்ள ஒரு மொழியினின்றும் இவற்றைக் கடன்கொண்டனர் என்பதையே யன்றி வேறன்று.

3. மெய்யெழுத்துகளை முறையாக வரிசைப் படுத்துவதெனின் அடியண்ணப் பிறப்பின (க, ங); இடையண்ணப் பிறப்பின (ச,ஞ); முன்னண்ணப் பிறப்பின (ட,ண); நுனியண்ணப் பிறப்பின (ற,ன); பல்லண்ணப் பிறப்பின [த,ந]; இதழகப் பிறப்பின [ப,ம] எனத்தான் ஒழுங்கு படுத்தியிருக்க வேண்டும். ஆனால் இம்முறைக்கு மாறாக ற,ன அகர வரிசையின் இறுதியில் இருத்தப்பெற்றுள்ளன. இதனின்றும் ழ, ள, ற, ன இல்லாத ஒரு பிறமொழி எழுத்து வரிசையைக்

கைக் கொண்ட தமிழர், அம்மொழியில் இல்லாத ழ,ள,ற,ன என்ற வரியன்களை எழுத்து வரிசையின் இறுதியில் அமைத்தனர் என்பது புலப்படுகிறது.

4. மேலும் தமிழ் அகரவரிசையின் ஒலிப்புமுறையை விளக்கப் புக்க நச்சினர்க்கினியர் நுனியண்ணப் பிறப்பினவான ற,ன தனித்த தமிழ் ஒலியன்களாதலால் அகரவரிசையில் இறுதியில் வைக்கப் பெற்றன என்றார். சிவஞான அடிகளும், 'ழ' தனித்த தமிழ் ஒலியன் ஆதலால் இறுதியிலும் சமற்கிருத லகரத்தின் திரிபான 'ள' அதன் பின்னும் உள்ளன என்றார்

எனவே தமிழ் அகரவரிசை பிறமொழி அகரவரிசையொன்றின் ஒட்டுதலே எனக் கூறும், பா. தெ. பொ. மீ.யின் சான்றுகளின் மெய்ம்மை(!)யை ஆயலாம்.

தமிழறிஞர் என்று கூறிக் கொள்பவருட் பலரும் தொல்காப்பியருக்கு முன்னர் தமிழ் இலக்கியமோ இலக்கணமோ இருந்திருக்க வாய்ப்பில்லை என்று கருதிக் கொள்கின்றார்கள். இலக்கியத்தினின்றும் எடுபடுவதே இலக்கணம். மேலும் வழி வழிப் பெயரும் மாள வாரணம் கொண்ட எண்ணற்ற முதற்கழக, இடைக் கழக நூல்களுட் சிலவற்றைச் சிலப்பதிகார உரையும் இறையனர் அகப்பொருள் உரையும் செப்புகின்றன; எனவே தொல்காப்பியருக்கு முன்னர் நூற்றுக் கணக்கான இலக்கண இலக்கிய நூல்கள் வழக்கிலிருந்தன என்பது வெளிப்படை. நெடுங்காலம் வழிவழியாக வந்த இலக்கண மரபுகளைச் சீரிய வகையில் தொகுத்தளித்ததே தொல்காப்பியரின் அரும்பணி. இதனைத் தொல்காப்பியரே—அவர் பிராமணராயினும் மிகப் பல இடங்களில் மீண்டும் மீண்டும் தெரிவிக்கிறார், 'என்ப', என்மனார், போன்ற சொற்களின் வழி. என்ப என்பதற்கு 'என்று சொல்லுப (ஆசிரியர்)' என்று உரையாசிரியரும் பொருளுரைத்தார்.

தொல்காப்பியர் தொடக்கத்திலேயே

எழுத்தெனப் படுப
அகர முதல் னகர யிறுவாய்
முப்பஃ தென்ப

—என்றார். தொல்காப்பியருக்கு முன் பன்னூற்றுண்டுகளாக வழி வழியாக வந்த இலக்கண ஆசிரியர்கள் கூறிய கூற்றை மீட்டுக் கூற வந்த தொல்காப்பியர் "தமிழ் எழுத்துகள் 'அ' முதல் 'ன' வரை முப்பது என்று இலக்கண நூலோர் கூறுவர்" என்கிறார்.

1. கி. மு. ஏழாம் நூற்றுண்டினரான தொல்காப்பியருக்குப் பன்னெடுங்காலத்துக்கு முன்னரே உருவாகிச் செம்மையுற்ற ஓர் அகரவரிசையின் வரிவடித்தை, கி. மு. மூன்ரும் நூற்ருண்டினதான அசோகரின் கல்வெட்டைப் பின்பற்றியதென பர். தெ. பொ. மீ. கூறுவதை எப்படி ஒத்துக் கொள்ளவியலும்? தொல்காப்பியரின் காலத்தைக் கிறித்துவுக்குப் பின் என அவர் கருதிக் கொண்டாலும் அதற்கு முன் பன்னூற்ருண்டுக் காலமாய் இயற்கையோடியைந்து வழி வழியாய் வந்த ஒரு மொழியின் அகர வரிசையும் அதற்கான வரி வடிவும் பிற்காலத்ததாகவா யிருக்கும்? பிண்ட நூலான தொல்-காப்பியத்துக்கு முன்னெழுந்த தமிழ்நூல்களெல்லாம் எந்த அகர வரிசையால் எந்த வரிவடிவில் எழுதப் பெற்றன? அரிக்கமேட்டுத் தமிழ் எழுத்துக்கும் அசோகரின் வெட்டெழுத்துக்கும் ஒற்றுமை யிருக்கிறதெனின் எஃது எதைப் பின்பற்றிய தென்பது தெள்ளிதிற் புலனும்.

மாந்தன், தொடக்கத்தில் மெய் யாவற்றையும் (க்,ங்,ச்....) தனியே பலுக்கியிருக்க முடியாது; உயிர்மெய்யாகத்தான் பலுக்கியிருக்க யியலும். எனவே மெய் வடிவை அமைத்தத் தொடக்கத்தில் உயிர்-மெய்யின் முதலான அகர உயிர்மெய்க்குத் தான் வடிவம் (க ங,ச....) அமைத்திருப்பான். அதன் பின்னர் அகர உயிர்மெய்யின் மாத்திரை அகரத்தின் மாத்திரை யளவே யிருப்பதறிந்து மாத்திரை குறைந்த மெய்யைப் பிரித்துக்காட்ட அகர வுயிர்மெய்யின் மீது புள்ளி யிட்டான். அற்றன்றெனின் அரை மாத்திரையளவான மெய் யுடன் ஒரு மாத்திரை அகரம் சேர்ந்து அகரமெய் (க,ங,ச....) உருவாகும் போது குறி கூடியிருக்க வேண்டுமன்ரே? இங்ஙனமே, அகர வரிசை ஒழுங்குற்ற பின்னர் பிற்காலத்தில் உய்த்துணர்ந்த குற்றியலிகரம், குற்றியலுகரம் முதலானவற்றைக் குறிக்கத் தனி வரியனைப் பயன்படுத்தாது, முன் மரபுப்படி அவற்றின்மீது புள்ளியை யிட்டுக் குறுக்கம் குறிக்கப்பெற்றது. இதனின்றும் ஒலிப்பளவு குறைவதைக் குறிக்க அவ்வவ் வெழுத்து-களின் மீது புள்ளி (அல்லது கோடு) இடல் பண்டை மரபு என்பது புலப்படும்.

இம்முறைபிலேயே, ஏனைய உயிரெழுத்துகளுக்கெல்லாம் வரி வடிவை ஒழுங்கு செய்யுங்கால் உயிரெழுத்துகளின் இறுதிப் பிறப்புக் கட்டத்தில் தோன்றியுணரப் பெற்ற எகர ஒகரக் குறில்களை அவை தத்தம் நெடில் ஒலிப்பில் பாதியளவு (ஒரு மாத்திரை) குறைவதால் அந்நெடில்களின் மீது புள்ளியிட்டு வேறு படுத்தினர் அ, ஆ, இ, ஈ,

உ,ஊ,(எ),ஏ,ஐ,(ஒ),ஓ, ஔ-இவற்றுள் ஏனைய நெடிலுக்குக் கூடிய குறியுள்ள தென்பது மெய்ம்மையே. ஆயினும் அக் கூடுங்குறியும் நெடில் யாவற்றுக்கும் ஒரே வகையானதாக வில்லை. நெடிலை வேறு படுத்த வளைவுக்குறிகளையிட்டமை போலவே இறுதியில் தோன்றிய குறில்களான எகர ஒகரங்களைக் குறிக்க ஒலிக் குறைப்புக் குறியான மேற்புள்ளியை அந் நெடில்களின் மீதிட்டனர்.

2. பிறமொழியைப் பின்பற்றித் தமிழ் அகரவரிசையை அமைத் திருப்பின், இருமொழிக்கும் பொதுவானவற்றை முதலிற் கொண்டு அதன் பின்னர்தானே தமிழுக்கு மட்டும் சிறப்பாய் உள்ள எகர ஒகரக் குறில்களை வரிசைப் படுத்தியிருக்க வேண்டும். மாறாக அவ்வக் குறிலும் நெடிலும் இணைந்தே வருகின்றன. எனவே நெடுங்கணக்கை ஒழுங்கு செய்வதற்கு முன்னரே உயிர்களில் இறுதியில் தோன்றிய எகர ஒகரக் குறில்களைக் குறிக்க ஒலிக்குறைப்புக் குறியான புள்ளியை யிட்டனரே யன்றி, பிறமொழி ஒன்றிலிருந்து கடன் கொண்டனர் என்பது பொருந்தப் பொய்த்தலின்பாற் படும்.

குமரிக் கண்டத்தில் (கி.மு.10000க்கு முன்) தமிழ் அகர வரிசையை ஒழுங்கு படுத்துங்கால் அறியப்பெற்ற மெய்கள் 14. அவை க,ங,ச,ஞ,ட,ண,த,ந,ப,ம,ய,ர,ல,வ என்பன. தொடக்கத்தில் உருவான இப் பதினான்கு ஒலியன்களுள்ளும் எதிர் இனங்களான வல்லினத்தையும் மெல்லினத்தையும் அததற்கு இனமாகச் சோடி சேர்த்து, இறுதியில் இடையினத்தை அமைத்தனர். வல்லின மெல்லின மெய்களுள் க, ங அடியண்ணப் பிறப்பின; ச,ஞ இடையண்ணப் பிறப்பின; ட,ண முன்னண்ணப் பிறப்பின; த,ந பல்லண்ணப் பிறப்பின; ப,ம இதழகப் பிறப்பின. இவற்றின் பிறப் பிட முறைப்படி இவை (உள்ளிருந்து வெளிவாய் வரை) வரிசையாய்க் குறிக்கப் பெற்றன. இங்ஙனமே இடையின மெய்களும் இடை யண்ணி ய, முன்னண்ணி ர, பல்லண்ணி ல, பல்லிதழி வ என வரிசைப் படுத்தப் பெற்றன.

அதன் பின்னர் மொழியின் கூர்தலற வளர்ச்சியினுல் லகரம் திரண்டு ளகரமும், பின் ளகரம் திரண்டு ழகரமும் ஒலியுருவாயின. இங்ஙனமே ரகரம் திரண்டு றகரமும் தந்நகரத்தின் மாற்றொலிப் பான றன்னகரமும் உண்டாயின*. பின்னர் வந்த இலக்கண ஆசிரியர்-

*எடுத்துக்காட்டு:

கல்—கருமை; கல் + து = கஃறு; கஃறெனல்—கருமைக்குறிப்பு.
கல் — கால் = கருமை.
கால் — காள் — கருமை.
காள் — காழ் = கருமை.
அர் — அறு; ஒளிர் — ஒளிறு; முரி — முறி.

'—தமிழ்வரலாறு' பக்கம் 119; மேலும் பார்க்க: ப. 108-128.

–கள் (தொல்காப்பியருக்குப் பன்னெடுங் காலத்துக்கு முந்தியவர்கள்) ள,ழ,ற,ன என்ற ஒலியன்களின் செழுந்தமிழ் வழக்கை நோக்கி இவற்றுக்கும் அகர வரிசையில் முறையான இடம் அளித்தனர். எனினும் வழங்கிய வரிசை முறையைக் கலைக்காது, இறுதியில் உருவான இந்த அல்லொலியன்களை (allophone) இறுதியிற் சேர்த்தனர். எனினும் இந்த இறுதி நான்கு ஒலியன்களும் தமக்குள் முறையாக அமையுமாறு கவனித்துக்கொண்டனர். ள,ழ,ற,ன என்ற இவற்றுள் முன்னர்த் தோன்றியன முன்னண்ண வருடொலிகளான ள,ழ இரண்டும். இவற்றுள்ளும் ழகரத்தைப் பலுக்க, ளகரத்தைவிட, நாக்கு அண்ணத்தின் உட்புறம் மிகுந்து வருடுவதால் 'ழ' முன்பும் அதன்பின் 'ள'வும் முற்குறித்த முறைப்படி கொள்ளப் பெற்றன. பின் தோன்றிய ற, ன வன்மை மென்மையென வைக்கப் பெற்றன.

3. இந்த முறையை யறியாது ழ,ள,ற,ன என்ற இறுதி நாலெழுத்துகளும் வடவாரிய மொழிகளில் இல்லை; அம்மொழிகளின் எழுத்து வரிசையைத் தமிழும் பின்பற்றியது; இல்லாத எழுத்துகளை இறுதியிற் சேர்த்துக் கொண்டது என்பது உண்மையின்பாற் படுமோ? எ,ஒ,ழ,ள,ற,ன என்ற இரு தொகுதியுள் எ,ஒ முந்தியும் அதன் பின் ழ,ள,ற,ன என்ற மாற்றொலியன்கள் நெடுங்காலத்துக்குப் பிந்தியும் தோன்றின வென்பதில் எவருக்கும் ஐயமில்லை. பிறமொழி அகரவரிசையைத் தமிழ்மொழி கைக்கொண்டு அதில் இல்லாத ஒலியன்களை ழ,ள,ற,ன போல இறுதியில் அமைப்பதாயின் முற்றோன்றிய, முதலாவதாய அடிப்படையான உயிர் எழுத்து வரிசையிலேயே அம்முறையைக் கடைப்பிடித்திருக்க வேண்டுமன்றோ! எனவே இதனின்றும் உய்த்துணரக் கிடப்பது யாதெனின், குமரிக் கண்டத்தில் எகர ஒகரப் பலுக்கல் உணரப்பட்டு இன்றுள்ளவாறான உயிர்வரிசை முறையாக உருவான காலத்துக்குச் சற்று முன்னர் உலக முதன்மொழியிலிருந்து வடவாரிய மொழிகள் பிரிந்து திரிந்து சென்று விட்டன; அதனாலேயே அம்மொழிகள் எகர ஒகரக் குறில் இல்லாத தமிழ் உயிர்வரிசையைக் கைக் கொண்டுள்ளன; எகர ஒகரங்கள் உணரப் பெற்ற நெடுங்காலத்துக்குப் பின் மாற்றொலி-களாகப் பலுக்கப்பட்டுத் தமிழ் அகரவரிசையின் இறுதியில் இடம் பெற்ற ழ, ள, ற, ன அம்மொழிகளில் இடம்பெற வாய்ப்பில்லாமலே போயிற்று.

4. தமது கூற்றுக்குச் சாட்சியாக நச்சினார்க்கினியரையும் சிவஞான முனிவரையும் இழுக்கிறார் பர். தெ. பொ. மீ. தமிழும், தமிழரும் ஆரியத்தால் மூவாயிரம் ஆண்டுகளாக அடிமைப் பட்டுக்

கூற்றுயிரும் குலையுயிருமாகக் கிடக்கின்றனர். மாந்த [சூத்திர] மொழியான தமிழும், தமிழில் உள்ள யாவும் "தெய்வமொழி [!]"யான சமற்கிருதத்திலிருந்தே வந்தனவெனத் தமிழர் யாவருமே அயர்ந்தனர்; தமிழ் இனத்துள் வளமிக்கவரான வேளாளரும் தம்மைச் 'சற்சூத்திரர்' எனக் கூறி மகிழ்ந்தனர். தூய தமிழ் அடியாரான 'சாமிநாத தேசிகர்' என்பார், 'ஐந்தெழுத்தாலொரு பாடையென் றறையவும் நாணுவர் அறிவுடையோரே!' என உலக முதற்செம்மொழியைப் பழித்துரைத்தார். இத்தகைய 'சாமி நாத குரவனை நாடொறும் மனமொழி மெய்களாற் றெழுது' எழுதிய உரைக்கு விளக்கம் தந்த மாதவச் சிவஞான அடிகளையும் அவர் போன்றே பெரும பக்கத்தில் ஆழ்ந்த புலவர் பெருமக்களையும் பிராகிருத சமற்கிருத ஆதரவுச் சான்றுகளாக ஆக்குவதில் பொருளே யில்லை. அவர்கள் ளகரம் சமற்கிருத லகரத்தின் திரிபு என்பர்; [தமிழில் லகரம் இல்லை போலும்!] அந்த லகரத்தின் இருமடித் திரிபான ழகரத்தை [இரக்கப்பட்டு?]த் தமிழுக்கு ஒதுக்குவர். இவர்தம் சான்றுகளை புடம் போட்ட பின்பே ஏற்க வியலும்.

மொழி தோன்றி, அதனில் இலக்கியம் எழுந்து, அதன் பின்னர் எழுத்திலக்கியம் உருவாகும் ஒவ்வொரு காலக் கட்டத்துக்கும் பன்னூறு ஆண்டுகள் கழியும். எழுத்தும் (வரியனும்) படவெழுத்து, கருத்தெழுத்து, அசையெழுத்து, ஒலியெழுத்து என முறையாக வளர்நிலை அடையப் பன்னூறு ஆண்டுகள் ஆகும். இந்நான்கெழுத்து நிலையிலும் இறுதிச் சிறப்பு நிலையை, கி. மு. 10000க்கு முந்திய தலைக்கழகக் காலத்திலேயே அடைந்த மொழி தமிழ். மெய்யின் இயக்கம் உயிரொடு சிவணும் முறையை யறிந்த தமிழர் உயிர், மெய்க் குறுங்கணக்கோடு கூட உயிர்மெய் கூடிய நெடுங்கணக்கையும் இயற்கையோடியையத் தலைக்கழகக் காலத்திலேயே கொண்டு எண்ணற்ற நூல்களை இயற்றினர். இத்தகைய சிறப்புமிக்க பழம்மொழி பின்னர்ச் செய்யப் பட்ட மொழிகளின் அகரவரிசையை அடிப்படையாகக் கொண்டது என்பது வேடிக்கையானதே! அப்படியே பிறமொழியைப் பார்த்து வரியனை அமைத்துக் கொண்டிருந்தாலும், அவ்வொருசான்றே, அகரவரிசையையும் பின்பற்றி அமைப்பதற்கு எப்படிச் சான்றாக யியலும்? ஏற்கனவே வழங்கிவரும் பல மொழிகள் தம் வரியன்களை விட்டுவிட்டுப் பிற வரியன்களை இன்று கூடக் கைக் கொண்டுள்ளனவே. அதனால் அவற்றின் அகரவரிசையும் பிறமொழி வழியினதே என்று கூற அறிஞர் எவரும் முன் வரவில்லையே!

ஆறலைத்தலும் (High Jacking) வன்கவர்பும் (Aggression).

—எசு. ஆபிரகாம் க.மு; அறி.மு; ஆ.ப.
உயிரியல்துறை, மதுரைப் பல்கலைக்கழகம்.

பிறர் பொருளை வன்முறையில் கைப்பற்றும் மக்களையும் ஆறலைக் கள்வர்களையும் ஒத்து, பிறவற்றின் ஊண் அல்லது உறைவிடத்தை வன் முறையில் கவரும் உயிரிகளும் உள.

குயில் தனக்கெனக் கூடமைப்பதில்லை. ஆனால் அது காகத்தின் கூட்டில் தன் முட்டைகளை இடுகின்றது. காகம் அரிதின் முயன்று கட்டிய கூட்டில் போய் முட்டையிடக் குயில் செய்யும் சூழ்ச்சியைப் பாருங்கள். முதலில் ஆண்குயில் காக்கைக் கூட்டின் அண்மையில் பறக்கத் தொடங்குகின்றது. இதைக் கண்ட கூட்டுக்குரிய காகங்கள் அதை விரட்டிச் செல்கின்றன. மாரீசன் இராமனை இழுத்துச் சென்றவாறு ஆண்குயில் முன்னே பறந்து அவற்றை மிகத் தொலைவிற்கு இழுத்துச் செல்கின்றது. இதற்கிடையில் பெண் தயில் காகக் கூட்டில் இறங்கிக் காகத்தின் முட்டைகளில் ஒன்றை அகற்றிவிட்டு அதற்குப் பகரமாகத் தன் முட்டையை இட்டுச் செல்கின்றது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் திராவிடத்துக்குத் தாயாக மட்டுமன்றி ஆரியத்துக்கு மூலமாகவும் உள்ளது. முற்செய்யப்பட்ட வடதிரவிட மொழியான பிராகிருதத்தினும் செம்மையாய்ச் செய்யப்பட்ட சமற்கிருதத்தின் அடிப்படைச் சொற்களுள் ஐந்தில் இருபாகம் தமிழேயென்றும் சமற்கிருத வியாகரணம் தமிழ் இலக்கணத்தின் அடியொற்றியதேயென்றும் (வடமொழி வரலாறு), உலகின் முதற்செம்மொழி (The Primary Classical Language of the World) தமிழேயென்றும் நிலைநாட்டப் பெறும் இக்காலத்திலேயே இத்தகைய ஏமாற்றுகளுக்குத் தமிழரே உட்கிடையராயின், அரசர் முதல் ஆண்டிவரை அனைவராலும் 'தெய்வமொழி' என நம்பப்பட்ட அக்காலத்தே எத்தகைய ஏமாற்றுகள் நிகழ்ந்திருக்கும்?

வந்ததே தமிழுக்குக் கேடு-அந்த
வடதிருப் பதியிலும் 'தெ.பொ.மீ' யோடு! O

சில நாட்களுக்குப் பிறகு முட்டைகள் பொரித்துக் குஞ்சுகள் வெளியில் வருகின்றன. அவற்றுள் குயில் குஞ்சும் ஒன்று இருக்கின்றது. முட்டாள் காகத்திற்குத் தன் குஞ்சுகள் எவை, குயிற்குஞ்சு எது என்று கண்டுகொள்ள முடிவதில்லை. எல்லாக் குஞ்சுகளுக்கும் இரை யூட்டுகின்றது. இங்கும் குயிற்குஞ்சு தந்திரம் செய்கிறது. காகம் இரையுடன் கூட்டுக்கு வரும்போது குயில் குஞ்சு காக்கைக் குஞ்சுகளைத் தள்ளிவிட்டு முன்னால் சென்று வாயைத் திறக்கின்றது. அறிவிழந்த காகம் அதன் வாயில் இரையைக் கொட்டிவிட்டுச் செல்கிறது. சில சமையங்களில் குயிற்குஞ்சு காக்கைக் குஞ்சைக் கூட்டுக்கு வெளியே தள்ளி விடவும் செய்கிறது. அப்படித் தள்ளப்பட்ட தன் குஞ்சு தரையில் கிடந்தாலும் காகம் கொஞ்சமும் கவலைப்படுவ தில்லை.

இவ்வுண்மையைக் கண்ட திருமூலர்,

'குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக்கூட் டிட்டால்
அயிற்பின்றி வளர்க்குமாப் போல்"

என்று வண்ணிக்கின்றார்.

தந்திரமாக மிகுந்த உணவைக் காகத்திடமிருந்து பெற்று உடல் பருத்ததும் குயிற்குஞ்சு கூட்டை விட்டு ஓடிவிடுகிறது. இவ் வுண்மையை,

"உயிர்த்த பொழுதேநின் குரல்கேளா முன்ஓடிற்று
—ஈன்றதாய்
நயத்தின் வளர்த்ததாய் குரல்கேட் டலுமே நடுங்கித்
துறந்தது "

என்னும் 'பிரபுலிங்க லீலை' (63)யிலிருந்து அறியலாம்.

சில பூச்சிகள் (ஆறு காலிகள்) அடா வழியில் பிறவற்றின் கூடுகளைக் கைப்பற்றுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டு மாழைப் பசுநிறக் (Metallic green) குளவியே. இக்குளவி நம் தென்னகத்திலும் உண்டு. இது பிற இனக் குளவிகள் அல்லது தேனீக் கூடுகளில் முட்டையிடலாம். அவற்றில் ஒன்று குயவன் குளவி (Pottor Wasp) எனப்பெறும். ஏனெனில் இதன்கூடு சிறிய மட்பானையின் உருவமுடையது. இது தன் முட்டைகளையும், இவற்றிலிருந்து வெளியேறும் குஞ்சுகளுக்கு உணவாகும் பிற வேற்றின உயிர்களையும் (Larvae) குயவன் கூட்டில் வைத்து மூடி

விட்டுச் சென்று விடுகின்றது. பச்சைக் குளவி பிற பூச்சிகளின்-வேற்றின உயிர்களின் உடலுக்குள் மயக்கப் பொருளைச் செலுத்துகிறது. ஆகையால் வேற்றின வுயிர்கள் சாகாமல் பச்சைக் குயவன் குளவிகளின் வேற்றுயிர்கள் (Larvae Ruby wasp) தத்தம் முட்டைகளிலிருந்து வெளியேறும்வரை மயக்க நிலையி லிருந்து, பச்சைக் குளவியின் குழவிகளுக்கு உணவாகின்றன.

குயில் பிற பறவைகளின் கூடுகளில் தன் முட்டைகளை இடுவது போல், பச்சைக் குளவியும் பிற பூச்சிகளின் கூடுகளில் தன் முட்டைகளை யிடுவதால், இது 'குயில் குளவி' (Cuckoo-wasp) என்றும் அழைக்கப் பெறுகின்றது. இப் பச்சைக் குளவியின் முட்டைகளிலிருந்து வெளியேறும் வேற்றின வுயிர்கள் (Larvae) கூட்டின் உரிமையாளர்களாகிய பிற வேற்றின உயிர்களை உண்டு விடுகின்றன. பிற பூச்சியின் உறை விடத்தைக் கைப்பற்றி அதன் வேற்றின உயிர்களை உண்பது மாபெரும் வன் செயலன்றோ? இவ்வாறு இன்னொரு குளவியும் (Mutilla) தேனீக்களின் உறைவிடத்தில் முட்டைகளை இடுகின்றது.

இனி, கடல்வாழ் கொள்ளைக் கூட்டத்தை ஆய்வோம். நம் தென்னகக் கடற்கரையில் பருந்தளவான வெண் பறவைகளைப் பார்க்கலாம். இவை பலவகைப் படுவன. இவை ஆலாப் பறவைகள் அல்லது கடற்காகங்கள் (Sea Gulls) என்னும் பெயரைப் பெற்றுள்ளன. இவற்றுள் ஓரினம் சுகுவா கடற்காகம் (Squa Gull) ஆகும். இது நம் கடலில் இல்லை. இது புகழ்பெற்ற கடற் கொள்ளைக்காரன் (Pirate). இந்த சுகுவா ஆலாப்பறவை பிற பறவைகளை வழி மறித்துக் கொள்ளையடிக்கின்றன. இயல்பான ஆலாப் பறவை மீனை யுண்டு மீளுங்கால், இச் சுகுவா ஆலாப் பறவைகள் அதை விரட்டி அலைக்கழித்து அதன் உணவை (மீனை)க் கக்கும்படி செய்கின்றன. இப்படிக் கக்கப்படும் மீன் நீரில் விழுமுன் பிடித்து விழுங்கிவிடுகின்றன. (மாந்தக் கடற் கொள்ளைக்காரர்கள் முற்காலத்தில் கப்பல்களைச் சூழ்ந்து அவற்றில் இருக்கும் பொருள்களைக் கவர்ந்து சென்றது இங்கு நினைவு கூரத்தக்கது).

கிறித்துமசு தீவுகளில் போர்க் கப்பற் பறவைகள் (Man of war birds or Fregeta) உள. இவற்றிற்கு நீண்ட கூர்மையான இறக்கைகள் உண்டு. போர்க்கப்பல் வேகத்தில் இவை பறப்பதால் இப்பெயர் பெற்றன. போர்க் கப்பற் பறவைகள் ஆலாப் பறவை-

களையோ, கெனற்று (Gannet) என்ற பறவைகளையோ சுற்றி வட்ட மிட்டுப் பறந்தும், அவற்றைக் கொத்தியும் அவை உண்ட உணவைக் கக்க வைக்கின்றன. இவ்வாறு கக்கப்பட்ட உணவை உண்ணுகின்றன.

வட இந்தியாவில் ஊர் மக்கட்குத் தொல்லை கொடுத்த புலி முதலிய கொடிய விலங்குகளைக் கொன்று, அவர்களின் அச்சத்தைப் போக்கி, நல் வாழ்வுக்கு அடிகோலிய சிம்கார்பெத்து என்ற வீரர் தாம் எழுதிய நூலொன்றில் ஒரு சுவையான செய்தியை வண்ணித்துள்ளார். அவர் ஒரு காட்டில் வேட்டையாடுங்கால் வல்லூறு (Accipiter) என்ற பறவை வெண்புள்ளிக் குண்டுக் கரிச்சானை(Saxicola)ப் பிடித்துச் சென்றது. இக்காட்சியைக் கண்ட இன்னொரு வகைச் செந்தலை வல்லூறு (Falco columb-arlus) முதல் வல்லூறை விரட்டிச் சென்று அது பற்றிய குண்டுக் கரிச்சானைக் கைப்பற்றிச் சென்றது. இச்சிறு நாடகத்தில் தேன் பருந்து (Pernis apivorus) என்ற நடிகர் நுழைந்து செந்தலை வல்லூறை அலைக்கழித்துக் குண்டுக் கரிச்சானைக் கவர்ந்தார். இறுதியில் இன்னொரு வல்லூறு (Falco Peregrinus) குண்டுக் கரிச்சானைத் தன் உடைமையாக்கியது.

கூரிய அலகுடைய பவ்வின்கள் (Puffin) அயர்லாந்திலும், இலண்டி (Lundi) பார்னே (Farnes) தீவுகளிலும் வாழ்கின்றன. இசுகாத்துலாந்து மலை முகடுகளிலும் காணப்பெறுகின்றன. தாம் வாழும் வளைகளைத் தாமே உண்டாக்குகின்றன. ஆனாலும் இவை வாழும் வட்டாரங்களில் முயல்களின் வளைகள் இருக்குமாயின் தம் மனச்சான்றை மழுக்கி அவற்றைத் தம் வீடுகளாக ஆக்கிக் கொள்கின்றன.

நான்கு குடும்பங்களைச் சேர்ந்த பறவைகள் தமக்கெனக் கூடு கட்டும் மரபு வழக்கத்தைக் கைவிட்டுவிட்டுப் பிற பறவைகளின் இருப்பிடங்களை வலிந்து கைப்பற்றுகின்றன. அந்நான்கு குடும்பங்களின் பெயர்கள் வருமாறு:- (1) தேன்காட்டிப் பறவைக் குடும்பம், (Indicatoridae) (2) தூக்கணாங்குருவிக் குடும்பம் (Plocaidae) (3) வாத்துக்குடும்பம் (4) குயில் குடும்பம் (Cuculidae). வாத்துக் குடும்பத்தைச் சேர்ந்த பறவைகள் தரையிலுள்ள குழிகளிலும் மரப்பொந்துகளிலும் கூடுகட்டி அங்கு இனப் பெருக்கம் செய்கின்றன. (எ-டு) கருந்தலை வாத்து (Heteronetta

atricapilla) பிறவாத்துகளின் கூட்டில் தன் முட்டைகளை இடுகிறது. சில பறவைகள் [ஏ-டு அசிலாய்டிசு (Ageloides)] தமக்குச் சொந்தமான கூடுகளைக் கட்டலாம்; அல்லது பிறவற்றின் கூடுகளில் தம் முட்டைகளை இடலாம்.

சில விலங்குகள் ஒரு குறிப்பிட்ட பரப்பளவு இடத்தைத் தம் சுற்றிடமாக வைத்துக் கொள்கின்றன. இச் சுற்றிடம் உயிரியலில் 'பற்ருர்வப் பரப்பு' அல்லது 'தன்னுட்சிப் பகுதி' (Territory) என்றழைக்கப்பெறுகிறது. சிறு பறவைகளின் (Robin) பறுர்வப் பரப்பு இரண்டு குறுக்கம் (acre). பொற்கழுகின் (Eagle) ஆட்சிப் பரப்பு 30 சதுரக் கற்களாகும். இப் பரப்புக்குள் தமக்கும் குஞ்சு களுக்கும் இரை தேடலும் பெற்றோர் பறவைகளின் காதலாடலும் (Courtship) நிகழும். இப்பரப்புக்குள் புதிய விலங்குகள் வரின் போர் நிகழும். வன்கவர்பாளர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

பாலூட்டிகளிலும் பற்ருர்வப் பரப்பு (Terrories) உண்டு. அவை தம் சுரப்பி (Glands) களில் உண்டாகும் சுரப்பை (Secretion), பல மரங்கள், செடிகள் முதலியவற்றில் தேய்த்துத் தம் ஆட்சிப் பகுதியின் பரப்பைப் பிற விலங்குகட்கு அறிவிக்கின்றன. புலிகளுக் கும் ஆட்சிப் பரப்புண்டு. ஒரு புலி மற்ருெரு புலியின் அதிகாரப் பரப்புக்குச் சென்ருல் போர் மூளும். இதை அடிப்படையாக வைத்து "இருபுலிகள் ஒருமலையில் வாழ முடியாது" என்ற பழ மொழியை உண்டு பண்ணினுர்கள் போலும்.

ஒரு பறவை எதிரியுடன் போர்செய்ய முடியாது என்று உணர்ந்த வுடன், அஃது எதிரியை அமைதிப் படுத்தும் முறையைக் கடைப் பிடிக்கின்றது. உடனே எதிரியை நோக்கி நீட்டிக் கொண்டிருந்த தன் அலகைக் கீழ் நோக்கியோ அல்லது மேல் நோக்கியோ வைத்துக் கொள்ளும். சில பறவைகள் தம் இறகுகளைக் கோத(Preen)த் தொடங்கிவிடும். O

'தமிழம்'

(திங்களிதழ்)

ஆசிரியர்: உலக முதல்வீ

0 தென்மொழி யணியில் சிறப்புடன் வெளிவந்து கொண்டுள்ளது!

தனியிதழ் 50 காசு. ஆண்டுக்கட்டணம் 6 உருபா.

இன்றே உறுப்பினர் ஆகுங்கள்.

'தமிழம்' 17. நாகப்ப முதலி தெரு, சென்னை-2.

தமிழ்நாடு தமிழருக்கே ஆகவேண்டும்! வடநாட்டுத் தன்னதிகாரம் ஒழியவே வேண்டும்!

—தமிழ்த்தென்றல். திரு. வி. க.

(9—11—49 அன்று சென்னைத் தூயமேரி மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கழக மாநாட்டில், வ.உ.சி. படத்தைத் திறந்துவைத்துத் திரு.வி.க. ஆற்றிய சொற்பொழிவு இது. அவருடைய மூலக் குரலையே கேட்க வேண்டுமென்பதால் நடையைத் தனித்தமிழ்ப் படுத்தவில்லை. காலமெல்லாம் பேராயக் கட்சியிலிருந்து இந்திய ஒருமைப்பாட்டை விரும்பிய திரு.வி.க. தம் இறுதிக் காலத்தில், தமிழ்நாடு தனியே பிரிந்தாலன்றித் தமிழர் முன்னேற, வடநாட்டுத் தலைவர்கள் இடந்தர மாட்டார்கள் என்பதை உணர்ந்து ஆற்றிய சொற்பொழிவு இது. கட்சிக் கட்டுப்பாடின்றித் தமிழர்கள் தமிழர்களின் முன்னேற்றத்திற்கே பாடுபட வேண்டும் என்னும் அவர் குரலை இதில் கேட்கலாம். 2-12-73 அன்று, திருவாரூரில் இயற்றமிழ்ப் பயிற்றகம் நிறுவிய சிலை திறப்பு விழாவின் நினைவாக இக்கட்டுரை வெளியிடப் பெறுகின்றது.)

நான் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் படத்தைத் திறப்பேன் என்றார் தலைவர். இத்தனிப்பேற்றினை வழங்கிய கழகத்தாருக்கும் உங்களுக்கும் என் நன்றி உரியதாகுக. நான் இங்கு எக்கட்சியின் சார்பிலும் வரவில்லை. நான் எக்கட்சியையும் சார்ந்தவனல்லன்.

சிலர் நினைக்கிறார்கள், திரு வி.க வுக்கு ஒரு கட்சி கிடையாது. ஒரு கொள்கை கிடையாது; எங்கும் போவார். எவர் படத்தையும் திறப்பார் என்று. எனக்குக் கொள்கையுண்டு. என் கொள்கை என் கையில் இருக்கிறது. ஏழை மக்கள் கையில் இருக்கிறது. பாட்டாளி மக்கள் கையில் இருக்கிறது. நான் சாதி, மத. நிற, மொழி, நாடு முதலிய எல்லாப் பேதங்களையும் கடந்தவன். பொதுமக்களின் சுய வாழ்வுதான் எனது குறிக்கோள். ஒவ்வொரு மனிதனையும் சுயேச்சை யுடன் வாழ, உயர்த்த எக்கட்சி பாடுபட்டாலும் அங்கெல்லாம் நான் போவேன், வருவேன், பாடு படுவேன்.

அடிமையாக இருக்க விரும்பவில்லை:

நான் காங்கிரசில் மிகத்தொண்டு செய்தவன். நாட்டில் காங்கிரசு விழ்ந்துபட்ட காலத்திலெல்லாம் தொண்டு செய்தவன். பின் ஏன்

காங்கிரசைவிட்டு விலகினேன்? கொள்கையில் வேறுபாடா? முரண்பாடா? அல்ல, அல்ல, அல்ல. காங்கிரசு செயற் குழுவுக்கு அடிமையாக இருக்க விரும்பவில்லையென்ற காரணந்தான். காங்கிரசின் (குறுந்தடிக் கொள்கை) பாசிசக் கொள்கைகளையும், பிற்போக்கான தன்னலப்போக்கையும் கண்டித்தே வெளியேறினேன்.

பெரியார், வ. உ. சி. விலகியதேன்?

பரந்த நோக்குடன் காங்கிரசில் பாடுபட்டு உழைத்த இராமசாமியும் (பெரியார்) விலகினார். ஏன்? இதே காரணங்களால்தான். வ.உ. சிதம்பரனாரும் வெளியேறினார். ஏன்? உரிமை, உரிமை; உரிமை மறுக்கப்பட்டது பிரிந்தோம். தனி மனிதனின் உரிமையைக் காக்கவே நாங்கள் பிரிந்தோம். காங்கிரசு செயற்குழுவின் பாசிசக் கொள்கையை வெறுத்தே வெளியேறினோம்.

காங்கிரசு பதவி வேட்டையாடும் சுயநலவாதிகளின் பிடியிலே சிக்கிக்கொண்டு உள்ளது. காங்கிரசு பாசிசப் போக்குடன் செல்கிறதா இல்லையா என்று தமிழ்நாடு காங்கிரசு தலைவரையே கேட்கிறேன். இல்லையென்று கூறுவாரா?

காந்தியத்தில் நம்பிக்கையில்லை:

வ. உ. சி. அவர்கள் சைவர். ஆனால் வடநாட்டுச் சைவத்தைப் பின்பற்றுகின்ற திருவாடுதுறை, திருப்பாதிரிப்புலியூர் மடத்தார் போற்றுகின்ற சைவமல்ல, சாதி சமயச் சழக்குகள் தென்னாட்டுச் சைவத்தில் இல்லை. எவ்வுயிரிடத்தும் அன்பாயிரு; எல்லோரும் ஓர் குலம் என்பதே, வ.உ.சியின் கொள்கை. தென்னாட்டு மகாசன சபை உண்மையாக வடநாட்டுக் காங்கிரசை எதிர்ப்பதற்காக ஏற்பட்டது. ஆனால் அது இன்றைக்கு அக்கொள்கைக்கு முரண்பட்டிருக்கிறது. வ. உ. சிக்கு காந்தியத்தில் நம்பிக்கையில்லை. அவர் கதர் கட்டமாட்டார். கதரில் நம்பிக்கை இல்லையென்று பச்சையாகச் சொல்லுவார்.

அமைச்சர் ஒருவருக்குப் பைத்தியம்:

அவர் அறவாள் வைத்திருப்பார்; அதுதான் அறிவு நிறைந்த திருக்குறள்வாள். திருக்குறளின் உண்மைகளை அறியாததால்தான் இத்திருநாடு அதன் சிறப்பை இழந்தது.

வடநாட்டாரால் திணிக்கப்பட்ட போலித் தியாகம் தமிழர்களின் நாகரிகத்தையும், கலைப்பண்பையும் பாழ்படுத்திவிட்டது. ஒன்றின் மீது அளவற்ற பைத்தியம் பிடித்தலைவதும் இயல்பாகிவிட்டது.

சான்றாக நமது மாகாணத்தின் அமைச்சர்களில் ஒருவர் தமிழர்களின் கலைக்கருவூலமான குறளிலிருந்து காதல், மணவாழ்க்கை ஆகிய பகுதிகளை எடுத்து விடவேண்டும் என்றுகூடச் சொல்லும் அளவுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. தமிழர்களின் பண்பு நமது அமைச்சருக்குத் தெரியாதென்று நினைக்கிறேன்!

வ. உ. சியின் தொண்டினைப்பற்றிப் பேசப்பேச நம்நாட்டில் தன்னம்பிக்கை உண்டாகும். அப்போது நேருவின் கண்காணிப்பு தேவையில்லை; பட்டேலின் உதவி தேவையில்லை. (நீண்ட கைத் தட்டல்)

எல்லோரும் ஓர் இனம்:

தமிழ்நாடு தமிழருக்கானால், ஆந்திரநாடு பிரியும், மலையாள நாடு பிரியும். கன்னட நாடு பிரியும். பிரிந்த சில காலத்திற்குள் என்ன ஏற்படும்? ஆந்திரர்கள் "அச்ச தெலுங்கு காவல" (தூயதெலுங்கு வேண்டும்) என்பார்கள். மலையாளிகளும் 'அச்ச மலையாளம் வேண்டும்' என்பார்கள். கன்னடியர்களும் அப்படியே. அப்போது சுத்த தெலுங்கில் 100க்கு 90 தமிழ்ச்சொற்களாக இருக்கும். சுத்த மலையாளத்தில் 100க்கு 95 தமிழும் அப்படியே கன்னடத்திலும் அமையும். அது போல மொழியால் எல்லோரும் ஓர் இனம் என்பதை உணர்வார்கள். இன்பத்தால் ஒன்றென்று அணைவர்.

தமிழ்நாடு தமிழருக்கே!

"எனவே இப்போது தமிழ்நாடு, ஆந்திரநாடு, மலையாளநாடு அதற்கு பிறகு என்ன? நீங்களே சொல்லுங்கள்" (என்று மக்களை பார்த்துக்கேட்டார்.) (கூடியிருந்த பெரும்பகுதியினர் "திராவிடநாடு திராவிடருக்கே!" என்று பெரும் ஆரவாரம் செய்தனர்.)

"ஆம்! அடுத்து, திராவிடநாடு திராவிடருக்கே ஆகும்" (மக்கள் நெடுநேரம் கைதட்டல்.)

இப்பொழுது வடவேங்கடம் எல்லை. பிறகு இன்னும் விரியும். மராட்டியரும் கண்விழிப்பர். அவர்களும் மொழியால் திராவிடர், இனத்தால் திராவிடர் என்பதை உணர்வர். இப்பொழுதும் அவர்கள் இருப்பிடத்தை "தட்சிணம்" என்றுதான் சொல்லிக்கொள்கின்றனர்.

அப்போது நமக்கு வடக்கு எல்லை வடவேங்கடம் அன்று! விந்தியமலையாக விளங்கும். இதன் முடிவு "தமிழ்நாடு தமிழருக்கே; திராவிடநாடு திராவிடருக்கே!" என்பது. (நீண்ட கைதட்டல்.)

ஆட்டிப்படைக்கும் வடநாட்டுப் பாசிசம்:

இதை அடைவதுதான் தமிழனுக்குப் பெருமை. வடநாட்டுப் பாசிசத்தைத் தமிழன் இன்று தாங்கித், திணற வேண்டியிருக்கிறது. சிறப்பாக ஒரு இனத்தாரின் ஆதிக்கத்தை நாம் ஒழிக்க வேண்டியிருக்கிறது. (கைதட்டல்) இதையே நான் கடலூர் மாநாட்டிலும் கூறினேன்.

சாதி மத உயர்வு, தாழ்வுகளை யொழித்த சமதர்மமே எனது கொள்கை. வெள்ளையனுக்குத் துணையாக இருந்துகொண்டு வடநாட்டுப் பாசிசம் நம்மை ஆட்டிப் படைக்கின்றது. அதற்கு இடம் தாராதே. இந்த வடநாட்டுப் பாசிசத்தை யொழிப்பதுதான் இக்கழகத்தின் முதல் வேலையாக இருக்கவேண்டும்.

படேலிசத்தை முறியடிப்போம்:

சென்னை மாகாண ஆட்சியை ஆந்திர நாட்டுக்கு வேறு, தமிழ் நாட்டுக்கு வேருகப் பிரிக்க கவர்னர்செனரல் (ஆளுநர் பொதுவர்) முயல்வதாக கூறப்படுகிறது. இதை நம்பவேண்டாம் என உங்களை எச்சரிக்கிறேன். இந்த முயற்சிக்குக் காரணம் கவர்னர் செனரல் அல்லவே அல்லர். காங்கிரசை ஆட்டிப் படைத்து நாட்டிலே சர்வாதிகார ஆட்சி செலுத்தும் வேறொருவரே இதற்குக் காரணம்.

உடனடியாகப் போரிட வேண்டியது ஆந்திரர்களோடோ, அல்லது மற்ற நம் சகோதரர்களோடோ அல்லவே அல்ல. பாசிசப் படேலிசத்தை முறியடிப்பதே நம்மை முன்னேக்கியுள்ள மாபெரும் பணியாகும். (பெரும் கைதட்டல்)

—(வெளியிட்ட விடுதலைக்கு நன்றி).

தமிழ் மறவர். திரு. வை. பொன்னம்பலனர் மறைவு.

தமிழ் மறவர். திரு வை. பொன்னம்பலனர் அவர்கள் நெடுநாட்களாக உடல் நலிவுற்றிருந்து கீழமாளிகையில் தம் இல்லத்திலேயே, நளி ௩அ (3—12—73) ஆம்பக்கல் திங்களன்று இயற்கை யெய்தினர் என்னும் செய்தியறிந்து மீளாத் துயரில் ஆழ்ந்தோம். அவருடைய இழப்பு தமிழர்க்கும், தமிழ் மொழிக்கும் தன்மான இயக்கத்திற்கும் பேரிழப்பாகும். அன்னரின் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் 'தென்மொழி' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

—அமைச்சர், 'தென்மொழி'.

சமற்கிருத இலக்கியம்.

பதினெண் தொன்மங்களும் (புராணங்களும்) இராமாயணம் பாரதம் ஆகிய மறவனப்புகளும் (இதிகாசங்களும்) தவிர, இசை, நாடகம், கணியம், மருத்துவம் முதலிய பிற கலையறிவியல் இலக்கிய மெல்லாம் தமிழ் முதனூல்களின் வழி நூல்களாம். சமற்கிருதத்தில் மொழி பெயர்க்கப்பட்டபின், தமிழ் முதனூல்களெல்லாம் அழிக்கப் பட்டு விட்டன.

வேதங்கள், பிராமணங்கள், ஆரணியகங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், சம்கிதைகள், சாக்கதங்கள், தந்திரங்கள்!

சமற்கிருதத்திற்கு முந்திய இந்திய ஆரிய இலக்கியம் வேதம் ஒன்றே. வேதத்தைப் பெண்டிரும், சூத்திரரும் ஓதக்கூடாதென்பர். ஆயின், பெண்டிரும் சூத்திரரும் சிலர் வேத மந்திரங்களையே இயற்றி யிருக்கின்றனர்.

வேதம் இயற்றிய பெண்டிர்: புலோமனை மகள் சசி, காமை மகள் சிரத்தை, சக்தி மகள் கோரவி, அப்பிரீன மகள் வாக்கு, அகத்தியர் மனைவி உலோபா முத்திரை.

வேதம் இயற்றிய பழங்குடி மக்கள்:

அரசர் (சத்திரியர்): மந்தாத்திரி, சிவி, வசுமனுன், பிரதர்த்தனன், விசுவாமித்திரன், மதுசந்தனன், ரிசபன், இரேணு, அம்பரிசன், பரதன், மேதாநிதி, நாபகன், இரகுகணன், வசப்பிரியன், புரூரவன், வேனன், சுதர்சன், கிருதசமதன், தேவாபி, சந்தானு முதலியோர்.

தொழிலாளர் (சூத்திரர்): கவசன், ஐலுசன் முதலியோர்.

கலப்புக் குலத்தார்: கக்சீவது (அங்க நாட்டு அரசனின் புழுக்கச்சி மகன்) போன்ற பலர்.

வேதம் செய்யுள் வடிவான மந்திரங்களைக் கொண்டது. முதன் முதல் தோன்றியது இருக்கு (ருக்) ஒன்றே! வேள்வி செய்தற்குரிய மந்திரங்களை அதனின்று பிரித்துத் தொகுத்தது எசுர் (யஜுர்). வேள்வியிற் பாடக் கூடிய மந்திரங்களைப் பிரித்துத் தொகுத்தது சாமம் (ஸாம). இங்ஙனம் ஒரு வேதம் மூவேதம் (வேதத்ரயீ) ஆயிற்று. அதன்பின் ஆறிலொரு பகுதி இருக்குவேத மந்திரங்களைக் கொண்டதும் பெரும்பாலும் சாவிப்பு மந்திரங்களாலானதும், உரை

நடை கலந்ததுமான அதர்வனம் (அதர்வன்) தோன்றிற்று. அதன் பின்னரே நான்மறை (சதுர்வேத) என்னும் வழக்கெழுந்தது.

வேத காலத்தின் பின், வேத சாத்திரங்களின் பொருளையும் பயனையும் சிறப்பையும் பெரும்பாலும் உரைநடையில் விளக்கும் உரையாக்த் தோன்றியவை பிராமணம். காடுறைவு (வனப்பிரத்த) நிலையிற் பிராமணனுக்குப் பயன்படும் கொண்முடிபு நூல்கள் ஆரணியகம் (ஆரண்யக). துறவு (சந்நியாஸ) நிலையில் பிராமணனுக்குப் பயன்படும் மெய்ப்பொருள் நூல்கள் உபநிடதம் (உபநிஷத்).

உபநிஷத்-உடன் கீழிருக்கை. உப-உடன் நி-கீழ் ஸத் (Sad)-இருத்தல். ஆசிரியன் அடியருகிருந்து அவன் நுவற்சியைக் கேட்டல் என்பதே விளக்கப் பொருள். பரம்பொருளறிவால் அறியாமையை ஓய்ந்திருக்கச் செய்கை என்பர், வடமொழியாளர். 'நன்கு அழித்தற்கு ஸாதனம்' என்பர் பர் (P.S.) சுப்பிரமணிய சாத்திரியார்.

கி. பி. ரு. ஆம் நூற்றுண்டிற்குப் பின், கோவிலமைப்பு, படிமையமைப்பு, வழிபடுமுறை, பூசகன்தகுதி, கொண்முடிபு முதலிய-வற்றைக் கூறும் தொழுமறைகள் தோன்றின. அவற்றுள் சிவனியத்திற்கு உரியவை தோன்றியம் (ஆகமம்) என்றும், மாலியத்திற்குரியவை தொகுப்பியம் (ஸம்ஹிதை) என்றும், காளியத்திற்கு (சாக்தத்திற்கு) உரியவை பாவகம் (தந்திரம்) என்றும் பெயர் பெறும்.

–பாவாணர். (தமிழர் மதம்.)

(48-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆக, நன்னூல் படியும், பாடநூல் வெளியீட்டாளர் கூறுவதன் படியும் இறுதிநிலை என்ன?

1. மெய் தனித்து ஒலிக்கப் (மாத்திரை) பெறுது.
2. உயிருடன் சேர்ந்து உயிர்மெய்யாங் காலத்தும் அது மாத்திரை (ஒலிப்பு) பெறுது.
3. சொல்லில் அமைவுழியும் அம்மெய்க்கு மாத்திரை (ஒலிப்பு) கிடையாது.

ஆயின், மெய்யெழுத்து என்றவொரு பெயரும், அதற்குரிய மாத்திரை அரை என்ற நெறியும் எற்றுக் குண்டாயின? தமிழில் மெய் என்பதன் நிலைதான் என்ன? 'மெய்யெழுத்து' என்பது முயற்கோடு-வானப்பூ என்றுற்போல்வதோர் இல்பொருள் பெயராமோ? கற்பனை யானவொரு கருத்தோ? யாரே விளக்க வல்லார்?

–புலவர். சா. பன்னீர்ச்செல்வம். பட்டுக்கோட்டை



மக்களவை

ம: 189: கண்ணதாசன் கவனிப்பாரா?

பாவலர் கண்ணதாசன் அவர்களுக்கு,

'கண்ணதாசன்' கன்னி (புரட்டாசி) இதழில் தனித் தமிழ் பற்றி எழுதியுள்ளீர்கள். அது தொடர்பாகத் தனித்தமிழ் ஆர்வலர் என்னும் முறையில் சில வினாக்களை எழுப்பியுள்ளோம். 'தனித்தமிழ்' பற்றி இப்பொழுது [இலங்கைத் தமிழர் கண்ணீர்த் துளிகளாய், தாயகத் தமிழர் தொடை நடுங்கிகளாய் உள்ள போது] எழுதக் காரணியம் என்ன? நீங்களாகவே எழுதினீர்களா? 'ஓதுவான்' எவனாவது 'ஓதி' எழுதப் பட்டதா? நீங்களாகவே எழுதினீர் எனில் நடுநிலையோடு (அறிவோடு) எண்ணி எழுதினீரா? அப்படி எண்ணி எழுதினீரென்றால் "தனித்தமிழுக்காக வெறியுணர்ச்சி ஏற்படும் அளவில், சில நேரங்களில் பகடி (கேலி)க்குரியதாக, தங்கள் திருப்பெரும் மெய்யைச் சிலிர்க்க வைக்க முடியாத" நிலைக்கு எழுதியவர் யார்? சிலரது போக்கென்று 'கிண்ணம் போல்' குறிப்பிட்டுள்ளீர்கள். யாரது போக்கென்று எழுதியிருக்கலாமே! தங்களுடைய இதழில் எழுத முடியாவிட்டாலுங் கூட அரை ஆடை அணங்குகளையும், ஆண்டவர் தரகர்களையும், அம்மாமிக் குஞ்சுகளையும் அன்றன்று, ஈ(க)நகர்ப் பிள்ளையார்போல் அறிமுகப்படுத்தும் 'சாணி உருண்டை' இதழ்களில் குறிப்பிட்டிருக்கலாமே! தனித்தமிழாசிரியர் என்ன வரலாறில்லா "ஈந்துமரம்" போன்றவர்களா? (தி. ம. கதிரில் திரு அண்ணா இராசேந்திரன் ஈ........ந்து ம....ரம், பற்றிக் கேட்ட போது விழித்த விழி விழிக்காமல் விடையிறுக்கவும்) அடுத்து, தனித்தமிழ் பற்றிய கருத்தை அறிவிக்க நீர் கற்ற நூல்கள் எவ்வளவு? யாருடையவை? மொழி ஞாயிறு பாவாணர் நூல்கள் அடங்குமெனில் நீர் மட்டுமன்று; உம் முப்பாட்டன் முயன்றாலும் அவர் கருத்துக்களை அசைக்க முடியாது. அவருடைய நூல்களைப் படிக்கவில்லையெனின் குண்டுச்சட்டியிலே உம் கிண்ணத்தைக் கிண்டுகிறீர்கள் என்று பொருள். தனித்தமிழ் பற்றி இருபது நச்சு வரிகளை உம் குள்ளநரித் தொடை எலும்புத் தூவலில் தூவியதற்கு வருவோம். 1. இலக்கியத்திற்கும், கருத்துப் பரிமாற்றத்திற்கும் சாதனம்தான் 'மொழி'. 2. வடமொழியை வேராகக் கொண்டது ஆங்கிலம். 3. சீனமொழியில் பாலி, பிராகிருத வார்த்தைகள் ஏராளம். 4. வங்கமொழியும் இந்திமொழியும் வடமொழியின் குழந்தைகள் 6. தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளர்கள்

யாவரும் 'மணிப்பிரவாள நடையினர்'—இவை உங்கள் கண்டு பிடிப்புகள்!

செத்தமொழிச் சொத்தைகளால் உலகமொழி மூலம் என்று செப்பிய (கோவிற் கருவறைகளிலும் ஒழிந்த) 'தேவபாடை' சாவூரிலே இருக்க ஏனய்யா அதற்குத் சந்தனம் பூசும்வேலே? தமிழ் தன் தனித்தியங்கும் தன்மையின் கொடுமுடியை அடைந்தால் எங்குத் தம் முடைய வாழ்வு வளங்கள் அழிந்துவிடுமோ என்று தமிழை வட மொழிச் சார்பில் பிணைக்கும் பாய்மாறிகளுக்குத் துணை போகிறீர் களே, உமக்குத் தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளர்களில் 'மணி' யார்? 'பவளம்' யார்? என்று பிரித்தாலல்லவோ உண்மை விளங்கும்.

1. தன்னோடு திசைச் சொற்கள் சில கலப்பதை எந்த மொழியும் வெறுப்பதில்லை. 2. காலத்தையொட்டி வளர்ச்சி பெறும் எந்த மொழியும் தன்னிடமில்லாத பிறமொழிச் சொற்களை வசப்படுத்தித்தான் வளர்கிறது 3. லிபியே இல்லாத மலாய்மொழி ரோமன்லிபியைத் தன் லிபியாகக் கொண்டு உருவாகிவிட்டது. 4. பிறமொழிச் சொற்கள் கலப்பதை எல்லா மொழிகளும் நாகரிகமாகவே ஏற்றுக் கொண்டுள்ளன. இவையும் உங்கள் உளறல்களே!

இவற்றுக்குச் சான்றாக உம் இதழையே எடுத்துக்கொள்வோம்:—

புதிய மாற்றம் என்ற சிறுகதையில் ஒரு பத்தி. 'இந்த உடம்புகளில் பிராணன் இருக்கிறதில்லை. தன்னைச் சூழ்ந்துள்ள சமூகம் பற்றிய பிரக்ஞை இல்லை. ஜடஸ்வருபங்களாய் வெறும் ஸ்தூலங்களாய் வயிறை நிரப்பவும், பொழுதைப் போக்குவதுமாய் இருக்கும் மனிதர்கள். மனுஷ்யர்களின் நிராதரவான நிலைமை மந்தபுத்தி கோர யுத்தங்கள் - வர்க்கப் போராட்டங்கள்- மரணம் மிதித்த சாம்ராஜ்யங்களில் வெடித்த வானத்தை முட்டும் கெக்கெலிச்சிரிப்பு–பிண உரங்களால் வளர்ந்த குரோதப் பயிர்கள்– யுத்த பூமியின் மயான மேட்டுப் பிசாசுகள்–இந்தப் பேச்சுக்களின் ஊடாகவே தேச சுதந்திரம்–கன்னங்கறேலென்ற சூன்யமான மஹின் மறைவும்"........! எப்படி மொழி வளர நாகரிமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நடை.

ஐயா, கம்பனே வடவெழுத்தைச் சேர்க்காமல் இராமன். இலக்குவன், சீதை என்றே எழுதினான். விளங்கிக் கொள்ளுங்கள். தமிழில் நுழைத்த கலப்புநிலை மொழி, மரபு, ஒலி, உணர்வு இவற்றைக் குலைத்து தமிழ் மொழிக் கொலை புரிகிறதே அன்றித் தமிழை எள்மூக்கத்துணையும் வளர்த்தி விடவில்லை. புஷ்பமும், அக்கினியும், ஸ்பரிசமும், சூன்யமும், ஆகாரமும் யாருக்குத் தேவை? இதுவா நீர்சொல்லும கலப்பு? சென்ற நூற்றாண்டில் விளங்கிய தமிழ் மகனின், தினவர்த்த மானி, தற்போதகம், தேசோபகாரி, அருணோதயம், அமிர்தவசனி, பாலதீபிகை

தேசதோழன், பாலியர்நேசன், தத்துவ போதினி, விவேக விளக்கம், ஜன விரோதினி போன்ற தாளிகைகள் எங்கு மறைந்தன? இன்றைய தமிழ்க் கொலைஞர் இதழ்களே வடமொழிப் பெயரைத் தாங்கியுள்ளன. (கல்கி, விகடன், மஞ்சரி, சுதேசமித்திரன், தினமணி, தினமலர், தினமணிக்கதிர், துக்ளக், நாரதர்) இன்று வரும் சிறுவர் இதழுக்கும் கோகிலம் என நன்றே பெயர் வைக்கிறார்கள். இது புரியாமல் 'லிபியே இல்லாத.........மலாய்மொழி' என்று கதை விடுகிறீர்களே. யாருக்குத் தேவை இது?

ஆங்கிலம் அரசுச் சார்பில் (வல்லாண்மையில்) வளர்ந்தது. அஃது ஒரு கலவைமொழி. எல்லா மொழிகளும் சேர்ந்தது. ஆங்கிலம் வளர அதற்கு அமைந்ததைப் போன்ற அரசு இன்னும் நமக்கு அமையவில்லை. 'என் நாட்டை இழப்பினும் செகப்பிரியரின் ஒரு ஒருவரியைக் கூட இழக்க ஒப்பேன்' என்று கூறியவன் சர்ச்சில் காலத்து வாழ்ந்தவன், நினைவிருக்கட்டும். தனித்தமிழரைச் சாடிய நீர் 'நாம் தொல்காப்பியர் காலத்திற்கு ஓடுகிறோம்' என்று கூறுகிறீரே! எண்ண அலையின் அருகில் கிண்ண அலை வீசியதோ! தொல்காப்பியம் போன்ற நூல் இல்லையென மாற்றார் கூறுவதும், தொல்காப்பியர் மரபு அழியாமல் இருப்பதும் எதைக் காட்டுகிறது என்பதை அருள் கூர்ந்து தெரிவிக்கவும்.

'வேற்றுமொழிக்காரர்...............முடியாத தமிழ்'. அது யாரய்யா அவ்வளவு விருப்போடு தமிழ் கற்க வந்து அது கடுமை என்று உரைத்தது? தமிழைக் கற்ற வெளிநாட்டான் 'தமிழ் மாணவன்' என்று கல்லறையில் எழுதி வைக்கும் அளவுக்குச் சிறந்தது 'தமிழ்' அன்றோ?

திருக்குறளின் கருத்தைச் சிதைக்காமல் எம்மொழியிலும் வெளியிடுவது அரிது என்றவன் யார்?

கிருத்துவ மதம் பரப்ப வந்த கால்டுவெல் 'திரவிடமொழி ஒப்பிலக்கணம்' வரைந்ததை மறக்க முடியுமா?

இறுதியாக ஒன்று கூறுகிறோம். "இருந்தமிழே உன்னால் இருந்தேன்" என்றும் "நைந்தாய் எனில் நைந்து போகும் என் வாழ்வு" என்றும் கூறப்பட்ட வரிகளுக்குச் சொந்தக்காரர் உன் முன்னோர். அதனை எண்ணுக. வழிக்கு வராவிடில் உமக்கு வரலாறு, அறிவு புகட்டியே தீரும். தடைக்கற்கள் உண்டென்றாலும் தடந்தோள்கள் உண்டு. —என்றும் பிறர் செய்யும் கேட்டுக்கு அஞ்சாத,

—துரை.-மடங்கன், மு. அரசு, முகிலன், இரா. பழனிச்சாமி, சு. வேலுச்சாமி, ப. வேலுச்சாமி —பூளைமேடு, கோவை.

பின்குறிப்பு:-

(பாவலர் கண்ணதாசன் தம் இதழில் 'எண்ணம்' என்னும் தலைப்பில் வரைந்த வரிகளுக்கு மறுப்பாக விடுத்த மடலின் படி.)

ம: 190: "வெளிநாட்டுத் தூதரகங்களில் தமிழ் படும்பாடு".

பெருமைக்குரிய பாவல!

சென்னையில் இருந்து வெளியாகும் 'செந்தமிழ்ச் செல்வி' நடப்பு இதழில் (சிலம்பு சஅ, பரல் 2, பக். ௪௰௬-அக் 73) உயர்திரு கீ. இராமலிங்கனர் (ஆட்சிமொழித் தனி அலுவலர், 'தமிழ்மணம்' சென்னை-30) அவர்கள் "தமிழில் எழுதுவோம்" என்னும் தலைப்பில் எழுதியுள்ள தொடர்க் கட்டுரையில் இருந்து ஒரு பகுதியைத் 'தென்மொழி அன்பர்களின்' கவனத்திற்காக இவண் தருகிறேன்: "ஒரு செய்தி இதுபோது வந்து நினைவில் உறுத்துகிறது. ஓர் அயல் நாட்டில், அந்நாட்டவர் ஒருவர், தமிழ் படிக்க விரும்பினார். அங்கிருந்த நம் நாட்டுத் தூதுவர் அலுவலகத்துக்குச் சென்றார்; அவ்வலுவலக மேலவர்களில் ஒருவர் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். அவரிடம் சென்று தமிழ்மொழியைப் பற்றிய சிறப்புகளை அறிய விரும்பினார், அவ்வயல் மொழியர். அத்தமிழர், "தமிழை நாங்கள் கொச்சை வழக்கத்திற்கு (For Slang Purposes)த்தான் பயன்படுத்துகிறோம். நாங்கள் போற்றும் மொழி சமற்கிருதம். உயர்ந்த வழக்குகள் யாவற்றுக்கும் அம்மொழியே எங்களால் பயன்படுத்தப் பெறுகிறது" என்று கூறினாராம். கொச்சை வழக்கு என்றால் என்ன என்று ஓர் எடுத்துக்காட்டில் கூறுங்கள் என்றபோது, பட்டிக்காட்டில் பாடப்படும் இடக்கரான பாட்டு ஒன்றைப் பாடிக்காட்டினாராம், அவ்வலுவலர். அதை அப்படியே மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டிருக்கிறார் அந்த அயல் நாட்டவர். கேட்டதின் பேரில் பாடியும் காட்டினார். அயல்மொழியராதலின் சிறிதும் அருவருப்பின்றிப் பாடுகிறார்; நமக்குக் காது கூசுகிறது; அப்போது எங்களிடையே பெண்பாலர் எவரும் இல்லாதிருந்தது நல்லதாயிற்று. ஒரு தமிழர் தம் தாய்மொழியைப் பற்றி இப்படியா எண்ணுவது? சொல்லுவது?"

நடுவண் (தில்லி) அரசின் வெளிநாட்டுத்துறையில் இது போலும் நிகழ்ச்சிகள் நடந்து வருவதும், நடுவண் அரசு அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதும், நமது "தனியாட்சி" என்னும் வேட்கைத் தீயில் நெய் வார்க்கும் செயலின்றி வேறென்ன?

குறிப்பு: இக்கட்டுரை முழுவதிலும், கட்டுரை ஆசிரியர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள ஆரியப் பார்ப்பனர்களையும் 'தமிழர்கள்' என்றே குறிப்பிட்டுள்ளார்.

—இறை. மகிழ்நன். தஞ்சாவூர்

ம: 191 மெய்யென்பதும் பொய்யாமோ?

உயர்பள்ளிகளில் பயிலும் ஆறும் வகுப்பு மாணவர்களுக்கான தமிழ்ப்பாட நூலாக, தமிழகஅரசுப் பாடநூல் வெளியீட்டாளர் இந்தக் கல்வியாண்டில் (73-74) புதிய பாட

நூலொன்றை வெளியிட்டுள்ளனர். அதில் 81-ஆம் பக்கத்தில் **'மாத்திரை'** என்ற தலைப்பில் அமைந்துள்ள இலக்கணப் பாடத்தில் பின்வரும் பகுதி காணப்படுகிறது.

" உயிர்க்குறில் — 1மாத்திரை.
உயிர்நெடில் — 2மாத்திரை.
உயிர்மெய்க்குறில் — 1மாத்திரை.
உயிர்மெய்நெடில் — 2மாத்திரை.
மெய்யெழுத்து — ½மாத்திரை.
ஆய்த எழுத்து — ½மாத்திரை.

'முன்னோர்' என்ற சொல்லில் ஒரு குற்றெழுத்தும், ஒரு நெட்டெழுத்தும் உள்ளன. ன், ர் என்ற இரண்டு மெய்யெழுத்து-களுக்கும் அவை சொல்லில் இடம் பெற்றதால் மாத்திரை இல்லை. எனவே, அச்சொல்லைப் பலுக்க உயிர்மெய்க் குற்றெழுத்துக்கு ஒரு மாத்திரையும், உயிர்மெய் நெட்டெழுத்துக்கு இரண்டு மாத்திரையும் சேர்த்து மொத்தம் மூன்று மாத்திரை நேரம் ஆகும்."

மாத்திரை பற்றித் தரப்பட்டுள்ள பட்டியலின்படி முன்னோர் என்பதைப் பலுக்கத் தேவையான கால அளவு நான்கு மாத்திரை. ஆனால் பட்டியலின் கீழுள்ள விளக்கத்தில் இரண்டு செய்திகள் உள. ஒன்று 'முன்னோர்' என்ற சொல்லைச் சொல்லத் தேவைப்படும் கால அளவு மூன்று மாத்திரை தான் என்பது. மற்றொன்று, அச்சொல்லில் உள்ள ன்,ர் என்ற இரண்டு மெய்களுக்கும் மாத்திரை இல்லை என்பது.

ஆண்டாண்டுக் காலமாகப் பல்லாயிரம் தமிழாசிரியர்கள் கற்றும், கற்பித்தும் வரும் மரபுகளுக்கு முரண்பட்டதான இம்முடிவு-கள் யாரால் கொள்ளப்பட்டன- எவ்வகையிற் கொள்ளப்பட்டன என்பவை விளங்கிற்றில. புதுமையான இம் முடிவுகள் பாடநூலில் புகுத்தப்படும் செய்தியைத் தொடர்புடைய ஆசிரியர் அனைவரும் அறியச் செய்ய வேண்டிய கடப்பாடு பாட நூல் வெளியீட்டாளர்க்குக் கிடையாது என்பதானது நம் நாட்டின் நாணத்தக்க நிலைகளி லொன்றாகும். மேற்கண்ட முடிபினை ஏற்பதற்குத் தடையான ஐயங்கள் சிலவற்றை வகைப்படுத்தித் தர விழைகின்றேன்.

1. "மெய்யினளபே அரையென மொழிப" -என்றுரைத்த தொல்காப்பியர், **"அரையளவு குறுகல் மகரம் உடைத்தே"** எனவும், **"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்"** எனவும் கூறியவாற்றான், மெய்களிற் சில சொல்லில் அமைந்து வரும்பொழுது தம்மளவிற் குறைவுபடும் இடனுண்டு எனவும் உணர்த்தினர். அஃதன்றி, அரையளபு பெறுதலை சொல்லில் வரும் மெய்க்கு விலக்கும் நெறியினை யாண்டும் கூறினாரல்லர்.

தொல்காப்பியரின் மேற்சொன்ன இரண்டு கருத்துகளையும் நன்னூலார், **'மகரக்குறுக்கம்'** எனவும், **'ஒற்றளபெடை'** எனவும் வகைப்படுத்திப் பெயரும் கொடுத்தோதினர்.

விதந்துரைக்கப் பெற்றன தவிர, தனித்தனி யெழுத்துகளுக்கு உரைக்கப்பட்ட நெறிகள் அவை சொல்லாய்ச் சேர்ந்தமையுங் காலத்தும் பொருந்தும் என்ற கருத்தினைத் தொல்காப்பியர்,

"மொழிப்படுத் திசைப்பினும் தெரிந்துவே
றிசைப்பினும்
எழுத்தியல் திரியா என்மனார் புலவர்"—என்ற

நூற்பாவாலும், பவணந்தியார்,

"மொழியாய்த் தொடரினும் முன்னனைத் தெழுத்தே"
என்ற நூற்பாவாலும் அறிவுறுத்திப் போந்தனர்.

மெய்யெழுத் தெதுவும் சொல்லில் அமைவுழி மாத்திரை பெருதேல் அதனில் 'குறுக்கம்' யாண்டையது? அளபெடை' என்றற் கிடனேது?

2 எழுத்திலக்கணத்தில் புணர்ச்சி யிலக்கணம் என்பது தமிழின் தனிச் சிறப்புகளி லொன்ருகும். புணர்ச்சி பற்றிய நெறிகள் பண்டைத் தமிழாசிரியர் ஒலியியல் ஆய்வில் காட்டிய நுட்பத் திறனைத் தெள்ளிதின் விளக்குவன.

நம்பாட நூல் வெளியீட்டாளர் கூறுமாப்போல் வாழைபழம்-வாழைப்பழம் இரண்டும் ஒன்றுகொல்? இரண்டொலிகளுக்கும் வேறுபாடுண்டெனில் அவ் வேறுபாட்டொலிக்கு மாத்திரை மட்டும் கிடையாதோ? களம்-கள்ளம், இலை-இல்லை, வடு-வட்டு, அடை-அண்டை இன்னோரன்ன சொற்களுக்கிடையே ஒலிவேறுபாடின்றெனின் பொருள் வேறுபாடும் இல்லை யென்ருகாதோ? பொருள் மாறுபாட்டிற் கேதுவாக ஒலி வேறுபாடு உண்டெனில் அம்மாறுபட்ட வொலிக்குரிய மாத்திரை யாண்டுச் சென்றொளிந்தது?

3. ஆங்கில மொழியில், Writ-என எழுதி அதனை வாய்விட்டுச் சொல்லும் போது w-என்ற எழுத்து ஒலி பெறுவதில்லை. அவ்வாறே, Listen-என்ற சொல்லில் t- என்பதனொலி முற்ருக விடப்படுகின்றது. மேற்படி இடங்களில் மேற்படி எழுத்துகளை Sound less letters-ஒலிப்பற்ற எழுத்துகள் எனக் குறிப்பிடுவர்.

நம்பாட நூல் வெளியீட்டாளர் கூறுவதன்படி, தமிழில் மெய்யெழுத்துகள் அனைத்தும் 'ஒலிப்பற்ற' எழுத்துகள் எனல் தகுமோ?

'முன்னோர்'-என்பதில் ன்,ர்-இரண்டும் ஒலிக்கப் பெறுவதில்லையோ? குறிப்பாக ஈற்றுமெய்யான ர்-என்பது ஒலிக்கப் பெருதேல் கேட்போனுக்குப் பால் விளங்குமா றெங்ஙனம்? ஆண்பால், பெண்பால், பலர்பால் விகுதிகள் அன், ஆன் எனவும், அள்-ஆள் எனவும், அர்-ஆர் எனவும் வகைப்படுத்தப் பெறினும் உண்மையில் அவற்றின் ஈற்று மெய்களே திணை-பால் உணர்த்துகின்றன.

கேட்போனுக்குப் பால் வேறுபாடு விளங்குவான் வேண்டி, சொன்னான்-சொன்னாள்-சொன்னார் என ஈற்று மெய்யில் அழுத்தம் கொடுத்துச் சொன்னால் பொய்-யாமோ? மெய்யாயின் அம்மெய் மாத்திரை பெரு மாய மென்ன மாயமோ?

இனி-எம்முன்னே ஓர் ஐயம் கிளர்ந்தெழுகின்றது. 'முன்னோர்'-என்பதை ஒருவர் பலுக்குங் காலத்தில் நுண்மையான மின்னணுக் கருவியான் அளவிட, அச்சொல் மூன்று மாத்திரையி லேயே முடிவுற்றுவிட்டது – என்பதாகப் பாடநூல் வெளியீட்டாளர் கூறிடவுங் கூடுமோ—என்பதுதான் அவ்வையம்!

உண்மை அஃதாயின், அதனுண்மைப் பொருள் என்னை? மொத்தம் நான்கு மாத்திரைகளுக்குரிய மு-ன்-னோ-ர் என்ற நான்கு எழுத்துகளை இணைத்து ஒரு சொல்லாய்ச் சொல்வுழி அச்சொல் மூன்று மாத்திரையில் முடிவுறுதலின், எழுத்துகளை யிணைத்து சொற்களாய்ச் சொல்லுங்கால் அவற்றின் மொத்த மாத்திரை குறைவு படும் என முடிவு கொள்வதை விடுத்து, மூன்று மாத்திரைகளையும் மு-னோ-இரண்டிற்கு மட்டும் பங்கிட்டுக் கொடுக்கும் அதிகாரம் எவருக்குண்டு? எவ்வகையிலுண்டு?

இனி, இன்னொரு வேடிக்கையு முளது. மேற்படி தமிழ்ப்பாட நூலின் 41-ஆம் பக்கத்தில் 'மெய்யெழுத்துகள்' என்ற தலைப்பி லுள்ள இலக்கணப் பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது.

"சிறுவர் முதல் பெரியவர் வரையில் அனைவரும்"

மேலே உள்ள சொற்றொடரில் ஒவ்வொரு சொல்லின் இறுதி யிலும் நிற்கும் எழுத்துகளைக் கவனி. அவை புள்ளி பெற்ற எழுத்-துகள் அல்லவா? அவற்றை மட்டும் தனியே ஒலித்துப்பார். அவை தனியே ஒலிக்கமாட்டா. அவற்றோடு உயிர் எழுத்தை சேர்த்து பலுக்கு. இப்போது அவை ஒலிக்கின்றன அல்லவா? உயிர் இல்லாமல் இயங்காத உடம்பு அல்லது மெய் போன்றவை அவ்வெழுத்துகள். எனவே அவற்றை மெய்யெழுத்துகள் என்கிறோம்"

ர், ல், ம்.-என்றிவ்வாறுன உயிர்மெய்களை ஒலிக்குங்கால் உண்-மையில் நாம் இர், இல், இம்- என்றிவ்வாறாகவே ஒலிக்கின்றோ மாதலின் மெய்கள் தனித்து ஒலிக்க இயலாதவை என்பதே மேற்படி பத்தியின் கருத்தாகப்படுகிறது. இங்கும், மெய் தனித்து ஒலிக்கப் பெறுதேனும் உயிருடன் சேர்ந்து ஒலிப்புப் பெறும் என்றுரைத் திடும் மேதையானவர், அப்படி உயிருடன் சேர்ந்து ஒலிப்புப் பெறு கின்ற போதும் அம்மெய்க்கு மாத்திரை மட்டும் கிடையவே கிடை யாது என "அழிச்சாட்டியம் பண்ணுவதன் மருமம்" எவருக்குப் புலப்படும்?

(41-ஆம் பக்கம் பார்க்க)

சென்ற இதழ் முகப்புப் பாடலில் "மைக்கு" (Mike?) என்ற சொல் ஆளப்பெற்றுள்ளதே? (தென்மொழிப் படைப்பில் ஆங்கிலச் சொல்லா?) விளக்கம் வேண்டுகிறேம். இப்படியே 'தந்திரம்' என்ற சொல்லும் தமிழ்ச் சொல் ஆவது எப்படி? ''தென்மொழி" பிறை இதழ் (திங்களிருமுறை) ஆக ஆக்கப்படுவது இன்றியமையாதது எனக் கருதுகிறேம். பக்கங்களைக் குறைத்துக் கொள்ளலாம்; விலையை 50 காசுகளாக்கிக் கொள்ளலாம். எவ்வகைத் தாளையும் பயன் படுத்த லாம். ஆனல் அமைப்பை மாற்றக் கூடாது. விடுதலை இயக்க வளர்ச்சியில் இதுவே இரண்டாம் படிநிலையாக அமையுமென்று கருதுகிறேம். தங்கள் மெய்யறிவிற்கு உற்றவாறு செயல்படுக.

மூலனூர்—638106.—**இரணியன்,** நாரணவலசை

0: 391: சென்ற தென்மொழி முகப்புப் பாடலில் ஆங்கிலச் சொல் ஒன்றைப்பெய்து இருக்கிறீர்கள். இது மிகுந்த வருத்தத்தைத் தோற்றுவித்து விட்டது.

'சொல்லெவர்க்கும் கைக்கு வரும்; மைக்கு வரும்'

இதில், '**கைக்கு**' என்ற சொல்லின் ஒலிப்புக்கேற்ப '**மைக்கு**' என்ற ஆங்கிலச் சொல்லைப் போட்டிருக்கிறீர்கள் என்று உங்கள்மேல் குற்றம் சாட்டுகிறேன். —**மாமல்லன்**. பொழில் வாய்ச்சி.

(ஆசிரியர் குறிப்பு: சென்ற இதழ் முகப்புப் பாடலில் குறிக்கப் பெற்ற '**மைக்கு**' என்ற சொல் ஆங்கிலச் சொல்லன்று. மை—அச்சுமை; மைக்கு—அச்சு மைக்கு வரும்; 'அச்சேறும்' என்பதே பொருள். இதில் மயக்கத்திற்கு இடமில்லையே! —ஆர்)

0: 392: யானொரு தனித்தமிழ் பயிலும் தளர்நடைச் சிறுவன். குறிப்பாகத் தங்களது பாத்திறனிலும், செம்மாந்த மொழிவளத் தினும் உள்ளம் பறிகொடுத்தோன். கடந்த நான்காண்டுக் காலமாய்த் 'தென்மொழி'யையும், துணையிதழ்களையும் ஊன்றிப் படித்து வருகின்றேன். தங்கள் நூல்களையும், பாவாணரின் நூல்களையும் நுனித்தறிய முயன்றுள்ளேன். யான் வளர்க்கப் பெற்றதும், இன்றுள்ளதுமாய சூழ்நிலையில் தென்மொழியே எனக்குத் தனித்-தமிழுணர்வு கொளுத்தி வந்துள்ளது. உங்கள் சொற்றெறுஞ் சுரக்கும் அற்றமில் இன்பமும், பட்டாங்கு கிளக்கும் முட்டறு சிறப்பும், கன்னெஞ்சு நெகிழ்த்தும் நல்லுரை மொழியும் என்னுடைய வுள்ளத்து நிலைத்தவோர் இடனை அன்றே ஆட்கொண்டுவிட்டன. கழகப் பாடல்கட்கு நிகரான வளத்தமிழ்ப் பாக்கள் நலத்தக இயற்றிய உங்கள் அறிவையும், மொழியுணர்வையும் தெள்ளிதின் அறிந்து உள்ளம் உவந்தனன். தென்மொழிக் கருத்துகளையும், கொள்கைச் சிறப்புகளையும் எனது தமிழாசிரியர் தொடங்கிப் பலர்க் கும்படித்துக்காட்டி என் கடனை இயன்ற அளவிற் செய்து வருகின் றேன். 'நூறுசிரியப்' பாடல்களில் பலவற்றை அடிபிறழாது மனத்தில் இருத்தியுளேன். தங்களைக் கண்டு உரையாடி உள்ள உணர்வுகளைக் கொட்ட விழைகுவன். ஆயினும், பணியின் தன்மையும் பொருளின் பின்மையும் தடைசெய்து நிற்பன. தங்களடிக் கீழிருந்து முடிவுறக் கற்றுத் தனித்தமிழனுக உருவாக வேட்கின்றேன். இறையருள் முன்னிற்க! தங்கள் அன்பையும் அருளையும் நாடும்.

— **வி. சீ. கிருட்டிணன்**. சென்னை-4

கடந்த மூவாயிரம் ஆண்டு வரலாற்றில் வீழ்ந்து கிடந்த தமிழினத்தை மறைமலையடிகள், பாவேந்தர், பெரியார் போன்ற சான்றோர்கள் தூக்கி நிறுத்த, அதை இன்று தாங்கிக் கொண்டிருக்கும் தலைவர்களுள் ஒருவரும், கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக மொழி, இன, நாட்டிற்கே முழுதும் தம்மை ஒப்புவித்து, தமக்குப் படைக்கலனாய்த் 'தென்மொழி' யென்னும் தீந்தமிழ் இலக்கியத் திங்களிதழினைத் துணைக்கொண்டு தமிழர்க்கு உணர்வு கொளுத்தி

மலையகத் திருநாட்டில்

நம் இதழ் ஆசிரியர்

வருபவரும், தமிழனின் மீளா அடிமைத்தனங்கள் அத்துணையினின்றும் விடுதலை பெற 'தமிழக விடுதலை இயக்கங்' கண்டவரும், பாவேந்தருக்குப்பின் பாவுலகில் வேந்தராகவும், கழகத் தமிழ்ப் புலவர்களின் வரிசையோடொப்பவும் விளங்கும் நம் ஐயா பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் இத்திங்கள்இறுதியில் கடல் கடந்து தம் புகழ் நிறுத்தச்சென்ற கன்னித் தமிழ் ஆர்வலர்கள் நிறைந்த மலையா, சிங்கை ஆகிய நாடுகளுக்குக் கிளம்பவுள்ளார்கள். தென்மொழித் தொண்டின் திருப்பு பூனையாகவும் முன்னூறு தமிழரின்

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம் பார்க்க.)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.